DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1443
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday December 1, 2023

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

# University of Toronto-Scarborough Campus Welcomes Inaugural Head of Tamil Studies Department

# கனடா ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் தமிழ் இருக்கை பிரிவின் முதலாவது தலைவராக பேராசிரியர் சித்தார்த்தன் மௌனகுரு 2024 இல் பதவியேற்கின்றார்

**(ரொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)**




கனடா ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் தமிழ் இருக்கை மற்றும் ஆய்வுகள் பிரிவின் முதலாவது தலைவராக பேராசிரியர் சித்தார்த்தன் மௌனகுரு அவர்கள் 2024 இல் பதவியேற்கவுள்ளார் என ரொறன்ரோ பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது. உலகத் தமிழர்கள் அனைவரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கும் மேற்படி நியமனம் தொடர்பாக. ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் தமிழ் இருக்கை மற்றும் ஆய்வுகள் தொடர்பான பிரிவை நிர்வகிக்கவுள்ள வரலாறு மற்றும் உலகளாவிய ஆசிய ஆய்வுகள் திட்டப்பிரிவினர் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

மிகவும் ஆழந்தும் மற்றும் நுணுக்கமான தேர்வு செயல்முறையைத் தொடர்ந்து,எமது ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் ஸ்கார்பரோ வளாகத்தில் உள்ள தமிழ் ஆய்வுகள் பிரிவின் முதலாவது தலைவராக சித்தார்த்தன் மௌனகுரு நியமிக்கப்பட்டதை அறிவிப்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

.(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

## கனடா – மார்க்கம் நகரில் 27.11.2023 திங்கட்கிழமை இடம்பெற்ற "தமிழர் நினைவெழுச்சி நாள்" நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான உணர்வாளர்கள் மாவீரர்களை நினைவு கூர்ந்தனர்



கனடா-மார்க்கம் நகரில் அமைந்துள்ள விசாலமான திடலான "மார்க்கம் பெயர் கிறவுண்ட்ஸ்" மைதானத்தில் அமைக்கப்பெற்ற விசேட கொட்டகை அதனுள்ள நிறுவப்பெற்ற அழகிய மேடை ஆகியவற்றில் திங்கட்கிழமை - 27ம் திகதி இடம்பெற்ற "தமிழர் நினைவெழுச்சி நாள்- மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் பிரமாண்டமான நிகழ்வில் காலை தொடக்கம் இரவு வரை சுமார் 75 ஆயிரம் (அல்லது அதனிலும் சற்று அதிகமானவமர்கள்) உணர்வாளர்கள் உருக்கத்தோடு வந்து மாவீரர்களை நினைவு கூர்ந்தனர் என்ற செய்தி ஏற்பாட்டாளர்களுக்கு மிகுந்த மன நிறைவை தந்துள்ளது எனலாம். இந்த நிகழ்வை பல மின் மற்றும் இணையவழி ஊடகங்கள் நேரடியாக மக்களுக்கு எடுத்துச் சென்ற அவர்களையும் உணர்வு கொண்டவர்களாக பல மணிநேரங்கள் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தவும் கருவிகளாக செயற்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உள்ளே விபரமான செய்தி 8ம் பக்கத்தில்)

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

BIG
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road , Toronto ON M1P 2L5
RE/MAX ACE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

# விற்பனை நிலையம் தற்போது செயற்படுகின்றது




## தற்போது தயாராக உள்ள புதிய வீட்டுத் தொகுதி

பிக்கரிங் நகருக்கு வடக்கே அழகிய பங்களா இல்லங்கள் மற்றும் இரண்டு மாடி இல்லங்கள்

FROM **2,600-5,000 Sq. Ft.** ON

# 100' WIDE x 300' DEEP LOTS

விலைகள் 2.3 மில்லியன் டாலர்களிலிருந்து ஆரம்பமாகின்றன

## எமது விற்பனை நிலையத்திற்கு விஜயம் செய்யுங்கள்

திங்கள் தொடக்கம் வியாழன் வரை மதியம் 12.00 தொடக்கம் இரவு 7.00 வரை
வெள்ளிக்கிழமைகளின் வருவதானால் முன்பதிவு தேவை
வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்கள் மதியம் 12.00 தொடக்கம் மாலை 5.00 வரை
விற்பனை நிலையம் அமைந்திருக்கும் விலாசம்: 21 GOLF LINKS DRIVE, AURORA

அழையுங்கள் **416-606-7462**

அல்லது **ClareHavenEstates.com** என்னும் இணையத்தளத்திற்குச் சென்று பாருங்கள்

LEARN MORE

GERANIUM
From the ground up™

geranium.com

PIVOT
REAL ESTATE GROUP

Exclusive Listing Brokerage: Pivot Real Estate Group. *Prices, programs, and specifications are subject to change without notice. Renderings are artist's concept. Brokers protected. E.&O.E. November 2023.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

We acknowledge the financial support of the Government of Canada

## உரும்பிராய் காளி கோவிலில் ஐம்பொன் அம்மன் சிலை திருட்டு!

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் காளி கோயிலில் திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.
குறித்த ஆலய கர்ப்பக்கிரகத்தினுள் இருந்த 4 இலட்சம் பெறுமதியான ஐம்பொன்னிலான அம்மன் சிலை, அம்மன் தாலி, அம்மனின் தோடு உள்ளிட்ட ஒன்றரை பவுண் நகைதிருடப்பட்டுள்ளதோடு ஆலய வளாகத்தில் இருந்த உண்டியல் உடைக்கப்பட்டு ஒரு தொகை பணமும் திருடர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.
குறித்த திருட்டு சம்பவம் தொடர்பில் ஆலய பூசகரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.
29-11-2023 காலை 7 மணி அளவில் ஆலய பூசகர் ஆலயத்திற்கு சென்று பூசை வழிபாடுகளை மேற்கொள்ள முற்பட்ட போதே குறித்த திருட்டு இடம்பெற்றுள்ளமை தெரிய வந்ததாக ஆலய பூசகர் பொலிசாரிடம் வாய்முறைப்பாடு வழங்கியுள்ளார்.

## நெடுந்தீவில் இடம்பெற்ற சர்வதேச மீனவர் தினம்





யாழ் தீவகப் பெண்கள் வலையமைப்பின் சர்வதேச மீனவர் தின நிகழ்வு 30-11-2023 வியாழக்கிழமை மாலை நெடுந்தீவு தேவானந்தா கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.
நெடுந்தீவு பெண்கள் வலையமைப்பின் பிரதிநிதி திருமதி அமல ஜயான் றோயலா தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நெடுந்தீவு பிரதேச செயலாளர் எப்.சி.சத்திய சோதி,மற்றும் விருந்தினர்களாக நெடுந்தீவு கடற்தொழிலாளர் சமாசத்தின் தலைவர் லீலியன் குரூஸ்,நெடுந்தீவு பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வேர்ஜினி ஜெகாந்தன் மற்றும் மெசிடா நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.
-மேலும் குறித்த நிகழ்வில் பெண்கள் வலையமைப்பு பிரதிநிதிகள்,மீனவ பெண்கள்,மீனவ சங்க பிரதி நிதி களும் கலந்து கொண்டனர்.இதன் போது
இதன் போது சர்வதேச மீனவ தினத்தையொட்டி பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

உதயன் கதிரோட்டம்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் உரை வெற்றுக் கதிரைகளுக்கானது அல்ல!

சில நாட்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மாவட்ட பாரளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் அவர்கள் ஆற்றிய உரையானது சிலர் விமர்சனம் செய்வது போது பாராளுமன்றத்தில் உள்ள வெற்றுக் கதிரைகளை நோக்கி பேசப்பட்டது என்று எண்ணத் தேவையில்லை. பாராளுமன்றத்திற்கு அன்றைய தினம் சமூகமளிக்காத தமிழ் சிங்கள இஸ்லாமிய பாராளுமன்ற உறுப்பினர்களும் அவசியம் செவிமடுக்க வேண்டிய உரை என்பதை இவ்வாரக் கதிரோட்டத்தில் நாம் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது என்பதை முதலில் குறிப்பிட விரும்புகின்றோம்.
ஒரு சட்டத்தரணியாகவும் நல்ல ஆங்கில புலமை மிக்கவராகவும் விளங்கும் அவர் தனது தந்தையின் உயிர் எவ்வாறு பறிக்கப்பட்டது என்பதை நன்கு அறிந்து கொண்டவர். பெரும்பாலும் கொழும்பில் வாசம் செய்பவர். அடிக்கடி யாழ்ப்பாணம் கொழும்பு பயணங்களை தரை வழியாக மேற்கொள்பவர். ஆனால் அந்தந்த காலப்பகுதிகளில் பாராளுமன்றத்திலோ அன்றி வெளியிலோ சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு எவ்வித பயமும் இன்றி பயணிப்பவர்.
பொலிசாரோடும் இராணுவத்தோடும் நேருக்கு நேர் நின்று வாதிட்டு அவர்களுக்கு தம் பக்கமும் தமிழ் மக்கள் பக்கமும் உள்ள நியாயங்களை எடுத்துரைப்பவர். எனவே அவரது அன்றைய பாராளுமன்ற உரை தொடர்பாக விசேடமாக குறிப்பிடுவதற்கு நாம் விரும்பியிருந்தோம். ஆவரின் உரையை முழுமையாக இவ்வாரப் பத்திரிகையின் உட்பக்கத்திலும் பிரசுரித்துள்ளோம்.
எமது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களில் அதிகமாமனவர்கள். தங்கள் பதவி மூலமாகக் கிடைக்கும் சலுகைகளை அனுபவிக்கவும். ஜனாதிபதியையோ அன்றி பிரதமரையோ நேருக்கு நேர் சந்திக்கின்றபோது ‘பணிவுடன் சிரித்து’ விலகிச் செல்வதுமாக தங்கள் பாராளுமன்றக் காலத்தைக் கடந்து பின்னர் அடுத்து வரும் தேர்தலிலும் வெற்றி பெற்று ‘தமிழர் பிரதிநிதிகள்‘ என்ற புகழோடு தொடரவே விரும்புகின்றார்கள் என்பது ‘வெள்ளிடை மலை’ என்பதற்கு ஒப்பாகும்.
ஆனால் நமது பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது உரையில் சிங்கள மேலாதிக்க சிந்தனை உள்ளவர்களுக்கு ‘பாடம்’ சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர் போன்று பாராளுமன்ற எழுந்து நின்று விளக்கமளித்தார்.
அவர் தனது உரையில் முக்கியமாக குறிப்பிட்ட பகுதிகள் பின்வருமாறு. இந்தப் பகுதியையும் நேரடியாகவோ அன்றி ஒலிப்பதிவு மூலமாகவோ செவிமடுக்கும் பெரும்பான்மை இனப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இனிமேலும் உண்மையை ஏற்றுக்கொள்ளாமல் இருந்தால் அந்தப் பொறுப்பை அவர்களே ஏற்கவேண்டும் என்போம்.
“போர் முடிவடைந்த பின்னர் மிகச்சிறந்த நிலைக்கு செல்லவேண்டிய நாடு, இன்றைக்கு தலைகுப்புற விழுந்திருக்கிறதென்பது, உயிரிழந்த ஆத்மாக்களின் சாபங்களேயாகும். புத்த பெருமான கூட வெட்கித் தலைகுனியக்கூடிய அளவுக்குத் தான் உங்கள் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இனவழிப்பை செய்தவர்களை காவலர்களாக சிங்கள மக்கள் கருதினார்கள். ஆனால் இன்று சிங்கள மக்களுக்கே துரோகம் அளித்தவர்கள் என்ற அடிப்படையில், அவர்கள் அந்த மக்களாலேயே துரத்தியடிக்கப்பட்டனர். இனியாவது விளங்கிக்கொண்டு, உங்களின் மிக மோசமான இனவாதப் பாதையை விட்டு திருத்திக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.
இன்று உலகத்துக்கு நல்லிணக்கத்தைப் பற்றி பேசுகின்ற நீங்கள் இதையாவது செய்யுங்கள். அரசியல் காரணங்களுக்காக - இந்த அநியாயங்கள் தமிழ் மக்களுக்கு தொடர்வதை அனுமதிக்கவேண்டாம். வேறு தரப்புகளுக்கு கிடைக்கக் கூடிய அங்கீகாரங்களை நாம் ஒருபோதும் தடுப்பவர்களல்ல. எங்களுக்கு தேவைப்படும் விடயத்தையே நாங்கள் கேட்கின்றோம்” ஏஎன்ற கஜேந்திரகுமாரின் உள்ளக் குமுறல்களுக்கு நாம் அனைவரும் மதிப்பளிக்க வேண்டும் என்பதே இறுதியாக நாம் வடிக்கின்ற வரிகள்.!

Basement for Rent
Queen / James Potter
in Brampton
3 bedroom, 2 washrooms with seperate entrance
Available on January 1st 2024
Call: 289-654-7141

For All your Renovation Needs!
- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno
Call - Siva
416-706-8160

கொட்டாஞ்சேனையில் வீடு விற்பனைக்கு
கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள தொடர்மாடி கட்டடத்தில் (FLATS) ஒரு பெரிய அறை கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. நீர் மற்றும் மின்சாரம் போன்ற அனைத்து வசதிகளும் சிறந்த முறையில் செய்யப்பட்டுள்ளது.
தொடர்புகளுக்கு:- 647 779 1712

மணமகள் தேவை
கனடாவில் வசிப்பவரும் கனடிய பிரஜாஉரிமை உள்ளவரும் 39 வயதுடையவருமான விவாகரத்து பெற்ற ஆண் ஒருவருக்கு கனடாவில் வசிக்கும் மணமகள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்: 647 924 6373

பெண் சமையல் உதவியாளர் தேவை
ஸ்காபுறோவில் உள்ள வீடொன்றில் சிறு குடும்பம் ஒன்றுக்கு பெண் சமையல் உதவியாளராக பணியாற்ற ஒருவர் உடனடியாகத் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கலாம்.
மேலதிக விபரங்களுக்கு
பாலா மாஸ்டர்:- 416 418 8425

வேலை வாய்ப்பு
Cook and Kitchen Help Wanted
Cobourg நகரத்திலும் Downtown Toronto விலும் அமைந்துள்ள கனடிய உணவகங்களுக்கு Cook மற்றும் Kitchen Help ஆகியோர் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள். அனுபவம் விரும்பத்தக்கது. Cobourg நகரத்தில் வேலை செய்ய விரும்புவர்களுக்கு தங்குமிடம் மற்றும் போக்குவரத்து ஆகியன வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:-
416 294 7887

416 283 6232
இப்பொழுது உங்கள் GEETHAVAANI RADIO வை தொலைபேசி அழைப்பில் கேளுங்கள்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மட்டக்களப்பில் மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தல் செய்ய நீதிமன்றம் அனுமதி



27-11-2023

மட்டக்களப்பு மாவடிமுன்மாரி, தாண்டியடி, தரவை மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தல் நினைவேந்தல் செய்வதற்கு அனுமதியளித்ததுடன் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் சின்னங்கள் கொடிகள் படங்கள் பயன்படுத்த கூடாது திங்கட்கிழமை 27ம் திகதி மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மாவட்டத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்று நினைவேந்தல் செய்வதை தடைசெய்ய கோரி வாழைச்சேனை, வவுணதீவு, சந்திவெளி, கொக்கட்டிச்சோலை, வாகரை, பொலிசார் இன்நாள் முன்னாள் நா. உறுப்பினர்கள் மற்றும் தமிழ் கட்சிகளின் செயற்பாட்டாளர்கள் உட்பட ஒவ்வொரு பொலிஸ் நிலையமும் தலா 20 பேருக்கு எதிராக மட்டக்களப்பு, வாழைச்சேனை, நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றிருந்தனர்.

இந்த நிலையில் இந்த தடை உத்தரவுக்கு எதிராக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி நா. உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், கட்சி தேசிய அமைப்பாள் த. சுரேஸ், மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின்களான ஞா. சிறிநேசன், பா. அரியேந்திரன் உட்படவர்கள் சிரேஷ்ட சட்டத்தரணி பிறேம்நாத், விஜயகுமார் உட்பட 7 சட்டத்தரணிகள் மூலம் நீதிமன்றில் முன்நகர்வு பத்திரம் விண்ணப்பித்தனர்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் இறந்தவர்களுக்கு நினைவேந்தல் செய்ய உரிமையுண்டு எனவும் குறித்த மாவீரர் துயிலும் இல்லங்களில் மக்கள் சுயமாக நினைவேந்தலை அனுஸ்டிக்க முடியம் எனவும் அதற்கு அனுமதியளித்ததுடன் தடைசெய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் சின்னங்கள், கொடிகள், புகைப்படங்கள் பயன்படுத்தகூடாது எனவும் உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

எனவே மக்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு வருகை தந்து நினைவேந்தலில் அலை அலையாக திரண்டு ஈடுபடுமாறு தமிழ்தேசிய மக்கள் முன்னணி நா. உறுப்பினர் எஸ். கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின்களான ஞா. சிறிநேசன், பா. அரியேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் கரைவலைகளுக்கு கீரி மீன்களை அள்ளும் மீனவர்கள்



(27-11-2023)

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக அதிகளவான கீரி மீன்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 3 வகையான மீன்களான வளையா சூரை கிளவல்லா மீன்கள் என கரைவலைகள் மூலம் பிடிக்கப்பட்டு பல இலட்சம் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மருதமுனை மற்றும் கல்முனை பகுதிகளில் கீரி இன மீன்கள் இன்று அதிகளவாக கரைவலைகளுக்கு பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குறித்த கீரி மீன்களின் பெறுமதி 1 கிலோ சுமார் 300 முதல் 400 வரை விற்பனையாவதுடன் இதேவேளை இவ்வாறு பிடிக்கப்படும் மீன்களினால் ஒரு மீனவரின் நாள் வருமானமாக 05 முதல் 10 இலட்சமாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மருதமுனை கல்முனை கடற்கரையில் கரை வலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி தூண்டில் என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற நிலையில் கரைவலை மீனவர்களுக்கு இவ்வாறான சிறிய பாரிய மீன்கள் தொகுதியாக பிடிபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதே வேளை கிளவால் வளையா சூரை போன்ற மீன்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதன்படி வளையா மீன் 1 கிலோ 1800 ரூபாவாகவும் கிளவால் 1 கிலோ 2000 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் மடு பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லத்தில் உறவுகள் கண்ணீர் மல்க நினைவேந்தல்



- மன்னார் நிருபர் (27-11-2023)

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தமது உயிரை போராட்டக்களத்தில் தியாகம் செய்தவர்களின் நினைவாக, கார்த்திகை 27 ஆம் திகதி, மாவீரர் தினம் அனுஷ்டிக்கப் பட்டு வருகின்றது.

இந்த நிலையில் தாயகம் கோரிய உரிமைப் போரில் உயிர் நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் தாயகம் முழுவதும் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அந்த வகையில் மன்னார் பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஒன்று திரண்ட மக்கள் சுடரேற்றி உணர்வுபூர்வமாக தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தி யுள்ளனர்.

பொதுச் சுடர் ஏற்றப்பட்ட பின் மாவீரர்களின் உறவுகள் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். இதன் போது மாவீரர்களின் உறவுகள் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அரசியல் பிரதி நிதிகள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.





# Ratnam Foundation ஆதரவுடன் லண்டன் விம்பம் நடத்திய, மலையகம் 200ஐ முன்னிலைப்படுத்திய ஓவியக் கண்காட்சி




முதலாவது கண்காட்சி ஒக்டோபர் 20, 21 ஆம் திகதிகளில் தெல்லிப்பளை மகாஜன கல்லூரியிலும், இரண்டாவது கண்காட்சி ஒக்டோபர் 22, 23 ஆம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலும், மூன்றாவது கண்காட்சி ஒக்டோபர் 27, 28ஆம் திகதிகளில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்திலும், நான்காவது கண்காட்சி நவம்பர் 18, 19ஆம் திகதிகளில் மட்டக்களப்பு YMCA மண்டபத்திலும், ஐந்தாவது கண்காட்சி ஹட்டன் நகரசபை மண்டபத்திலும் முறையே நவம்பர் 24ஆம் 25ஆம் திகதியும் இடம்பெற்றது.

மலையக மக்களின் வலியும் வாழ்வும் என்ற கருப்பொருளை உள்ளடக்கிய ஓவியம், சிறுகதை கட்டுரை, என ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே, முதலாவது பரிசு ரூபாய் 50000, இரண்டாவது பரிசு ரூபாய் 30000. மூன்றாவது பரிசு ரூபாய் 20000 (ஓவியம் இருவருக்கு) என்றும் ஆறுதல் பரிசாக 10 போட்டியாளர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாயம் வழங்கப்பட்டது இப்படி ஒரு பெரும் தொகையை மலையக எழுத்துலகத்தில் மட்டுமல்ல இலங்கையில் சிறுகதை, ஓவிய, கட்டுரை போட்டிகளில் வழங்கப்படவில்லை விம்பம் லண்டன் இப்பெரும் தொகைப் பணத்தை எமது மலையகத்தில் திறமை மிக்கோரின் கைகளுக்குப் போய் சேர அரும்படுபட்டுழைத்தது எனலாம்.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் முடிகிறது. இருந்தும் அவர்கள் பட்ட வலியும் வடுவும் மாறாமல் இருப்பதை காட்சிப்படுத்தப்பட்ட ஓவியங்கள் பெரும் சாட்சியானது. இவ் ஓவியக் கண்காட்சியில் வெற்றி பெற்றவர்களுக்கான பணப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது. போட்டிக்கு வந்த பெரும்பாலான ஓவியங்களை விட்டு யாராலும் நகர முடியாதவாறு தத்ரூபமாக இருந்தது. மலையக மக்கள் இம்மண்ணுக்கு வந்து, காட்டை வெட்டி நாட்டை உருவாக்கினார்கள். இன்று இந்த நிமிடம் வரை மலையக மக்கள் இந்த தேசத்தின் நலனுக்காக பாடுபடுகிறார்கள். அவர்களின் நலனுக்கு யார் பாடுபடுகிறார்கள் என்றால் அது விடையில்லாத கேள்விக்குறிதான். அவர்களுக்கான சொந்த நிலம், வீடு, சுகாதாரம், அடிப்படை வசதிகள், வேலைவாய்ப்புகள் ஏன் சரிவிகிதமான உணவு கூட மறுக்கப்பட்டும் கிடைக்காமலும் இருக்கும் மக்கள் கூட்டம் அவர்தம் வாழ்வியலை இங்கு காட்சிப்படுத்தப்பட்ட ஓவியங்கள் பேசியன, கட்டுரைகள் பேசின, சிறகதைகள் பேசின, அவர்களை ஊக்கப்படுத்த லண்டனில் இருக்கும் Ratnam Foundation அமைப்புடன், ஆதிரை, எழுநா போன்ற பதிப்பகத்தாருடன் மானுட நிறுவனமும் கைகொடுத்திருக்கிறது.





மலையகத்தின் எல்லா பகுதிகளிலும் இருந்து வந்த பார்வையாளர்களும், போட்டியாளர்களும் பரிசில்களை பெற்றவர்களும் மிகவும் சந்தோமாக இருந்ததைக் காணக்கிடைத்தது.

மிகத் தொலைவிலிருந்து மிக அருகில் உணரவைத்துள்ள விம்பத்தின் அன்பும் உழைப்பும் மிகவும் நெகிழ்ச்சிக்குள்ளாக்கியது.


ஓவியங்கள் பேசிக்கொண்டேயிருக்கும்
கண்டு சென்றவர்களின் வழியெங்கும்...
வாழ்வெங்கும்...

- வி. எஸ்தர், ஹட்டன்

# கனடா ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் தமிழ் இருக்கை மற்றும் தமிழ் ஆய்வுகள் பிரிவின் முதலாவது தலைவராக பேராசிரியர் சித்தார்த்தன் மௌனகுரு 2024 இல் பதவியேற்கவுள்ளார்

கனடிய செய்திகள் Canadian News

(ரொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)


UNIVERSITY OF TORONTO SCARBOROUGH

UTSC Welcomes Inaugural Chair in Tamil Studies

Following an intensive and meticulous selection process, we are overjoyed to announce the appointment of **Sidharthan Maunaguru** as the inaugural Chair of Tamil Studies at University of Toronto Scarborough (UTSC). The Tamil Chair will be housed in the Program in Global Asia Studies in the Department of Historical and Cultural Studies.

This appointment marks a special milestone for our institution. It represents the culmination of one of the most significant public fundraising efforts in UTSC's storied history and underscores our commitment to Inclusive Excellence. We extend our heartfelt gratitude to the Canadian Tamil Congress and Tamil Chair Inc. for partnering with us and spearheading an expansive and dynamic grassroots campaign, which garnered the support of 3,800 donors from across the globe.

Prof. Maunaguru brings a unique blend of scholarly excellence and deep commitment to the Tamil diaspora. As an Associate Professor in Anthropology, jointly appointed with the Department of Sociology and Anthropology, and South Asian Studies Programme, and former Assistant Dean (Undergraduate Studies) at the Faculty of Arts and Social Sciences, National University of Singapore, he has led pivotal research initiatives. He was a Newton International Fellow (UK), and more recently a senior fellow at Collegium Helveticum, ETH (Switzerland). These focused on understanding the unique challenges faced by the South Asian Tamil diaspora. His work has received acclaim for its originality and significance. His in-depth and innovative research will surely enrich our academic community and chart the course for the growth of Tamil Studies at the University of Toronto and throughout Canada. Prof. Maunaguru will assume the role on **1 May, 2024**.

Such milestones are achievable only with the support and trust of our donor community. To each and every contributor, our gratitude is profound. Your support has advanced not just Tamil studies, but also the broader cause of cultural understanding.

**Thank you for helping realize this shared vision!**

கனடா ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் தமிழ் இருக்கை மற்றும் ஆய்வுகள் பிரிவின் முதலாவது தலைவராக பேராசிரியர் சித்தார்த்தன் மௌனகுரு அவர்கள் 2024 இல் பதவியேற்கவுள்ளார் என ரொறன்ரோ பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது. உலகத் தமிழர்கள் அனைவரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கும் மேற்படி நியமனம் தொடர்பாக. ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் தமிழ் இருக்கை மற்றும் ஆய்வுகள் தொடர்பான பிரிவை நிர்வகிக்கவுள்ள வரலாறு மற்றும் உலகளாவிய ஆசிய ஆய்வுகள் திட்டப்பிரிவினர் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

மிகவும் ஆழந்தும் மற்றும் நுணுக்கமான தேர்வு செயல்முறையைத் தொடர்ந்து,எமது ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் ஸ்கார்பரோ வளாகத்தில் (UTSC) உள்ள மிழ் ஆய்வுகள் பிரிவின் முதலாவது தலைவராக சித்தார்த்தன் மௌனகுரு நியமிக்கப்பட்டதை அறிவிப்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். தமிழ் இருக்கை என்னும் பிரிவானது எமது பல்கலைக் கழகத்தின் வரலாற்று மற்றும் கலாச்சார ஆய்வுகள் துறையில் உலகளாவிய ஆசிய ஆய்வுகள் திட்டத்தின் கீழ் இயங்கவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நியமனம் எங்கள் பல்கலைக்கழகத்திற்கு ஒரு சிறப்பு மைல்கல்லாக அமைகின்றது. இது எமது ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் ஸ்கார்பரோ வளாகத்தின் வரலாற்றில் மிகவும் குறிப்பிடத்தக்க பொது நிதி திரட்டும் முயற்சிகளில் ஒன்றின் உச்ச நிலையை பிரதிபலிக்கிறது என்பதும் இந்த திட்டம் உள்ளடக்கிய சிறப்புக்கான எங்கள் அர்ப்பணிப்புக்களையும் அடிக்கோடிட்டும் காட்டுகிறது. எமது பல்கலைக் கழகத்தின் தமிழ் இருக்கை மற்றும் ஆய்வுகள் பிரிவை நிறுவுவதற்கு உலகெங்கிலும் உள்ள சுமார் 3,800 நன்கொடையாளர்களின் நிதிப் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கு கனடிய தமிழ் காங்கிரஸ் மற்றும் தமிழ் இருக்கை இன்க் நிறுவனம் ஆகியவற்றுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புலம்பெயர்ந்த தமிழர்களுக்கான புலமைசார் சிறப்பு மற்றும் ஆழ்ந்த அர்ப்பணிப்பு ஆகியவற்றின் தனித்துவமான திரட்சியை பேராசிரியர் மௌனகுரு கொண்டு வருகிறார். மானுடவியலில் இணை பேராசிரியராகவும், சமூகவியல் மற்றும் மானுடவியல் துறை மற்றும் தெற்காசிய ஆய்வுகள் திட்டத்துடன் இணைந்து பணியாற்றி அனுபவம் இவருக்கு உண்டு. மேலும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் சமூக அறிவியல் பீடத்தில் முன்னாள் துணை முதல்வராகவும் (இளங்கலை படிப்புகள்), அத்துடன் அப்பீடத்தினால் மேற்கொள்ளப்பெற்ற முக்கிய ஆராய்ச்சிக்கு தலைமை தாங்கியும் உள்ளார். மேலும், பேராசிரியர் சித்தார்த்தன் அவர்கள் நியூட்டன் சர்வதேச அங்கத்துவம் (இங்கிலாந்து), பெற்றராகவும் விளங்குகின்றார். மேலும் சமீபத்தில் கொலீஜியம் ஹெல்வெட்டிகம், ETH (சுவிட்சர்லாந்து) கல்வி நிறுவனத்தில் அங்கத்துவம் பெற்ற மூத்த கல்வியாளராகவும் இருந்தார். மேலும். தெற்காசிய மற்றும் புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆகியோர் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களைப் புரிந்துகொள்வதில் இவர் வகித்த பொறுப்பான பதவிகள் உதவின. அவரது படைப்பு அதன் அசல் தன்மை மற்றும் முக்கியத்துவத்திற்காக பாராட்டைப் பெற்றது. அவரது ஆழமான அறிவும் மற்றும் புதுமையான ஆய்வுகளும் நிச்சயமாக நமது ரொறன்ரோ கல்விச் சமூகத்தை வளப்படுத்தும் என்றும் மற்றும் ரொறன்ரோ பல்கலைக்கழகத்திலும் கனடா முழுவதிலும் உள்ள தமிழ் ஆய்வுகளின் வளர்ச்சிக்கான பாடத்திட்டத்தை நிரல்படுத்தவும் இவரது பதவியேற்பு வழிசெய்யும் என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம். பேராசிரியர் மௌனகுரு 2024ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதியன்று பொறுப்பேற்பார்.

இத்தகைய மைல்கல்லை உதவிய நமது நன்கொடையாளர் சமூகத்தின் ஆதரவுடனும் நம்பிக்கையுடனும் மட்டுமே நாம் அடைய முடியும். எனவே ஒவ்வொரு பங்களிப்பாளர்களுக்கு எங்கள் ஆழ்ந்த நன்றியை தெரிவிக்கின்றோம். உங்கள் ஆதரவு தமிழ் ஆய்வுகளை மட்டுமல்ல, கலாச்சார புரிதலுக்கான பரந்த தேடலையும் மேம்படுத்தியுள்ளது.

நன்றி!

மேற்படி பேராசிரியர் சித்தார்த்தன் அவர்களின் நியமனம் தொடர்பாக கருத்து தெரிவித்த கனடிய தமிழ் காங்கிரஸ் அமைப்பின் முன்னாள் தலைவரும் தற்போதைய ஆலோசகருமான சிவன் இளங்கோ அவர்கள் கூறுகையில், “2018 இல் கனேடிய தமிழ் காங்கிரஸ் மற்றும் தமிழ் இருக்கை இன்க் ஆகியவற்றால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் இருக்கைக்கு தேவைப்பட்ட தொகையான $3 மில்லியன் கனடிய டாலர்கள் எமது நன்கொடையாளர்களின் பரோபகார சிந்தனை மூலமே சாத்தியமானது. எனவே தான் நாம் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தில் எமக்கான தமிழ் இருக்கையை நிதர்சனமாகக் காண முடிகின்றது. மேலும் தமிழ் ஆய்வுக்கான முதலாவது தலைவராகப் பேராசிரியர் மௌனகுரு நியமனம் செய்யப்பட்டதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.” என்றார்.

மேலும் ரொறன்ரோ பல்கலைக் கழகத்தின் தமிழ் இருக்கை மற்றும் ஆய்வுகள் பிரிவின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ள பேராசிரியர் சித்தார்த்தன் அவர்கள் ஈழத்தமிழ் கல்விச் சமூகம். பல்கலைக் கழகச் சமூகம் மற்றும் படைப்பிலக்கிய வட்டம் ஆகியவற்றில் நன்கு அறிமுகமானவர்களான பேராசிரியர் மௌனகுரரு மற்றும் பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு ஆகியோரின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வட்டுக்கோட்டையில் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு கௌரவிப்பு!

வட்டுக்கோட்டையில் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும் மாவீரர் நினைவேந்தலும் இலங்கை தமிழரசு கட்சியின் அலுவலகத்தில் இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி கிளை செயலாளர் பற்றிக் தனுஷ் தலைமையில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்பொழுது தாயக விடுதலைக்காக தன்னுயிரை இன்னுயிராக்கிய மாவீரர் பெற்றோர்களால் ஈகைச்சுடரேற்றப்பட்டு மலரஞ்சலியும் உணர்வுபூர்வமாக





செலுத்தப்பட்டது.



தொடர்ச்சியாக மாவீரர்களின் நினைவாக மாவீரர் பெற்றோர்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கி மதிப்பளிக்கபட்டதோடு தொடர்ச்சியாக முன்னாள் போராளி செழியனால் மாவீரர்களின் நினைவுரை முன்னெடுக்கப்பட்டது. இறுதியாக மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மதிய போசனமும் பரிமாறபட்டது.

இதன்பொழுது மாவீரர் பெற்றோர் மதிப்பளிப்பு நிகழ்வில் மாவீரர் பெற்றோர்கள், உரித்துடையோர், முன்னாள் போராளி செழியன், இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக்கோட்டை மகளிர் அணி செயற்பாட்டாளர்கள், இளைஞர் அணியினர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# 72 வயது சாதனைப் பெண் திருமதி: அகிலத்திருநாயகி அவர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தால் பாராட்டி கௌரவிப்பு



பிலிப்பைன்ஸில் நடைபெற்ற National Masters & Seniors Athletics போட்டியில் முல்லைத்தீவு - முள்ளியவளையைச் சேர்ந்த 72 வயதுடைய திருமதி. அகிலத்திருநாயகி அவர்கள் 1500 மீட்டர் ஓட்டப்போட்டி மற்றும், 5000 மீட்டர் விரைவு நடைப்போட்டி ஆகியவற்றில் 2 தங்கப் பதக்கங்களையும் 800 மீட்டர் ஓட்டபோட்டி ஒரு வெண்கலப் பதக்கத்தையும் வென்று இலங்கைக்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்தந்தார்.

இவரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு 24-11-2023 வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அ. உமாமகேஸ்வரன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அகிலத்திருநாயகி அவர்களது சாதனைகள் தொடர்பாக வாழ்த்துரைகள் இடம் பெற்றதுடன் நினைவுச் சின்னம் மற்றும் பணமுடிப்பு வழங்கியும் பொன்னாடை மாலை அணிவித்தும் திருமதி. அகிலத்திருநாயகி கௌரவிக்கப்பட்டார்.

குறித்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (நிர்வாகம்) திரு. எஸ். குணபாலன், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் திரு. லிங்கேஸ்வரன், பிரதம கணக்காளர் திரு. ம. செல்வரட்ணம், சமுர்த்தி பணிப்பாளர் ஆ. முபாரக், மாவட்ட பதில் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி க. ஜெயபவானி, பதவிநிலை உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர் திரு. சண்முகலிங்கம் திருமதி. அகிலத்திருநாயகி அவர்களது ஆசிரியர் திருமதி. ஐயம்பிள்ளை என பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாணம் — வல்வெட்டித்துறையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் 69வது பிறந்தநாள் நிகழ்வு இடம்பெற்றது



வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரின் பூர்வீக இல்லத்திற்கு முன்பாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது கேக் வெட்டி, வல்வெட்டித்துறை பாரம்பரிய உணவு வகைகளும் மக்களுக்கு வழங்கப்பட்டது.






# மட்டக்களப்பில் கைது செய்யப்பட்ட ஜனநாயகப் போராளிகள் கட்சி உப தலைவர் ச. நகுலேஸ் 14 நாட்கள் விளக்கமறியல்

(26-11-2023)

ஜனநாயகப் போராளிகள் கட்சி மட்டக்களப்பு வெல்லாவெளியில் உள்ள காரியாலயத்தில் வைத்து கைது செய்யப்பட்ட கட்சியின் உப தலைவர் சங்கரப்பிள்ளை நகுலேஸ் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற நீதவான் சனிக்கிழமை (25-11-2023) உத்தரவிட்டார்.

வெல்லாவெளியில் அமைந்துள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சி மட்டக்களப்பு அம்பாறை தலைமைக் காரியாலயத்தில் சனிக்கிழமை மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு அங்கு மாவீரர்களின் பெற்றோர் ஒன்று கூடினர்.



இந்த நிலையில் வெல்லாவெளி பொலிஸார் குறித்த காரியாலயத்துக்கு சென்று மாவீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு சட்ட விரோதமானது நிகழ்வை நிறுத்துமாறு தெரிவித்து நீதிமன்ற தடை உத்தரவை மீறி சட்டவிரோத ஒன்றுகூடல் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக குற்றச்சாட்டின் கீழ் கட்சியின் உப தலைவர் ச. நகுலேஸ் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட அவர்களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போது அவரை எதிர் வரும் 8ம் தேதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# யுத்தத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூர்ந்து மன்னார் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட திருப்பலி



- மன்னார் நிருபர் (27-11-2023)

யுத்தத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூறும் முகமாக மன்னார் பேசாலை மக்களின் ஏற்பாட்டில் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் திங்கட்கிழமை (27) காலை விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.





அருட்தந்தை எஸ். அன்ரன் அடிகளார் தலைமையில் குறித்த இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதன் போது யுத்தத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூர்ந்து தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை குடும்பம் தமிழகத்தில் தஞ்சம்



- மன்னார் நிருபர் (27-11-2023)

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் தமிழகத்தின் ஞாயிற்றுக்கிழமை (26) இரவு தனுஷ்கோடியில் தஞ்சமடைந்துள்ளனர்.

தலைமன்னார் பகுதியில் இருந்து படகு மூலம் புறப்பட்டவர்கள் இவ்வாறு அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம் புகுந்தனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக 150,000 ரூபா பணம் படகுக்கு கொடுத்து தாம் இலங்கையில் இருந்து வந்ததாக விசாரணையில் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அகதிகளாக தஞ்சமடைந்த 7 பேரையும் கடற்படையினர் மண்டபம் பகுதிக்கு அழைத்துச் சென்று பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு தஞ்சம் அடைந்தவர்களில் தாய், தந்தை, உள்ளடங்களாக 5 பிள்ளைகளும் அடங்குகின்றனர். இது தொடர்பான மேலதிக விசாரணை இந்திய காவல்துறையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தமிழீழ மக்களின் தேசியத் தலைவர் பிரபாகரன்

## உண்மை நிலையை உணராத கிணற்றுத் தவளைகள்
## உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் எச்சரிக்கை!




தமிழீழ மக்கள் தங்களது தேசியத் தலைவராக பிரபாகரன் அவர்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். உலகம் முழுவதும் வாழ்கிற தமிழர்கள் தங்களின் போற்றுதலுக்கும் பாராட்டிற்கும் உரிய தலைவராக அவரைக் கருதுகிறார்கள். இந்த உண்மையைத்தான் நாடாளுமன்ற உறுப்பினரான தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் கூறியிருக்கிறார்.

"அதுமட்டுமல்ல, 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் 50,000த்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டதற்கு பிரபாகரன் அவர்களிடம் மன்னிப்பு கேட்பேன்" என அவர் கூறியதற்காகவும் கிணற்றுத் தவளைகளாக இருக்கக் கூடியவர்கள் அவருக்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறார்கள்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் தரையிலிருந்து சிங்கள இராணுவமும், கடலிலிருந்து இந்திய கடற்படையும் இணைந்து நடத்திய கொடுமையான குண்டுவீச்சின் விளைவாகத்தான் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் மாண்டனர். அதற்காக மனசாட்சி உள்ளவர்கள் மன்னிப்புக் கேட்கத் தயங்கமாட்டார்கள். மனசாட்சியின் உறுத்தல் இல்லாதவர்கள்தான் தமிழச்சி தங்கபாண்டியனை சாடுகிறார்கள்.

இத்தகையவர்களை உண்மையான தமிழர்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள் என எச்சரிக்கிறேன்.

அன்புள்ள,

(பழ. நெடுமாறன்)
தலைவர்.



# சுகாதார சீர்கேடு காரணமாக கல்வியங்காட்டில் உணவகம் ஒன்றுக்கு சீல் வைப்பு!



கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாநகரசபையின் நல்லூர் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் பு. ஆறுமுகதாசன் தலைமையிலான குழுவினரால், கல்வியங்காட்டு பகுதியில் அமைந்துள்ள உணவகம் திடீர் பரிசோதனைக்கு ட்படுத்தப்பட்டது.

இதன்போது பல சுகாதார சீர்கேட்டு குறைபாடுகள் இனங்காணப்பட்டது. ஏற்கனவே பல தடவைகள் அறிவுறுத்தப்பட்ட நிலையிலும் தொடர்ந்து சுகாதார சீர்கேட்டுடனேயே உணவகம் இயங்கி வந்தமை அவதானிக்கப்பட்டது. அத்துடன் திகதிமுடிவடைந்த காலாவதியான உணவு பொருட்களும் பொது சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டது.

இதனையடுத்து உணவக உரிமையாளரிற்கு எதிராக நீதிமன்றில் புதன்கிழமை பொது சுகாதார பரிசோதகர் பு. ஆறுமுகதாசன் இனால் சுகாதார சீர்கேடு, காலாவதியான உணவு பொருட்கள் வைத்திருந்தமை என்பவற்றிற்கு தனித்தனியே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதவான் குறைபாடுகள் நிவர்த்தி செய்யும்வரை உணவகத்தினை சீல் வைத்து மூடுமாறு பொது சுகாதார பரிசோதகரிற்கு கட்டளை வழங்கினார். இதனையடுத்து பொது சுகாதார பரிசோதகர் பு. ஆறுமுகதாசனினால் உணவகம் சீல் வைத்து மூடப்பட்டது.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# STATEMENT BY THE GENERAL ASSEMBLY OF THE NATIONAL ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA REGARDING THE WORLD'S CONFLICTS

கனடிய செய்திகள்
Canadian News

NATIONAL ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA
Conseil national de la presse et des medias ethniques du Canada

NOVEMBER 2023

NEMPCC, members are deeply concerned about today's wars and conflicts in the world.

The National Ethnic Press and Media Council of Canada (NEPMCC) is an organization whose members are journalists and publishers of newspapers in over 75 languages and also producers of TV and radio programs informing and serving non-Anglo or Francophone communities across Canada, with their roots all over the globe. We are working together, sharing ideas and respect each other's opinion and culture, finding our diversity to be our best asset.

We, the members of the NEMPCC, are deeply concerned about today's wars and conflicts in the world, most recently in Israel and Gaza, as well as in Ukraine and every other part of the world. It concerns and pains us to see the loss of life and the human tragedies they cause. We are also devastated to hear about dozens of our fellow journalists who have lost their lives while performing their professional mission of reporting and informing the international pubic on these tragic events.

However, as citizens of our unique country Canada – the multicultural and multiethnic mosaic, we are also deeply concerned about the incidents of violence where our fellow Canadians of differing ethnic origins are turn against each other just because of their respective cultural backgrounds.

For all the above reasons, we appeal to all fellow Canadians to remember that this country is a safe haven for victims of numerous world conflicts and that we work together and build this unique society where people from over 200 ethnic cultural backgrounds, live in peace, dignity and respect for each other towards our diversity, despite our differences. To this extent, let us not destroy this peace and harmony and continue to respect our Canadian values. Let us concentrate on helping those in need wherever in the world they are and not let ourselves succumb to any form of violence or aggression towards each other.

We appeal to our fellow Canadians to keep in mind that we should not let wars and conflicts elsewhere damage our social fabric here in Canada, where we are all sisters and brothers living by the values we pledged to respect when we took the oath of citizenship to become Canadians and the chapter of human rights of our constitution.

# கனடா — ஒன்றாரியோ மாகாணத்தின் மார்க்கம் நகரில் 27ம் திகதி இடம்பெற்ற "தமிழர் நினைவெழுச்சி நாள்" பிரமாண்டமான நிகழ்வில் காலை தொடக்கம் இரவு வரை பல்லாயிரக்கணக்கான உணர்வாளர்கள் உருக்கத்தோடு வந்து மாவீரர்களை நினைவு கூர்ந்தனர்







கனடா - ஒன்றாரியோ மாகாணத்தின் மார்க்கம் நகரில் அமைந்துள்ள விசாலமான திடலான "மார்க்கம் பெயர் கிறவுண்ட்ஸ்" மைதானத்தில் அமைக்கப்பெற்ற விசேட கொட்டகை அதனுள்ள நிறுவப்பெற்ற அழகிய மேடை ஆகியவற்றில் திங்கட்கிழமை 27ம் திகதி இடம்பெற்ற "தமிழர் நினைவெழுச்சி நாள்" மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் பிரமாண்டமான நிகழ்வில் காலை தொடக்கம் இரவு வரை சுமார் 75 ஆயிரம் (அல்லது அதனிலும் சற்று அதிகமானவமர்கள்) உணர்வாளர்கள் உருக்கத்தோடு வந்து மாவீரர்களை நினைவு கூர்ந்தனர் என்ற செய்தி ஏற்பாட்டாளர்களுக்கு மிகுந்த மன நிறைவை தந்துள்ளது எனலாம். இந்த நிகழ்வை பல மின் மற்றும் இணையவழி ஊடகங்கள் நேரடியாக மக்களுக்கு எடுத்துச் சென்ற அவர்களையும் உணர்வு கொண்டவர்களாக பல மணிநேரங்கள் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தவும் கருவிகளாக செயற்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


காலை 7.00 மணி தொடர்க்கம் இரவு சுமார் 11.00 மணி வரை நடைபெற்ற இந்த "தமிழர் நினைவெழுச்சி நாள்" மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் பிரமாண்டமான நிகழ்வை மிகவும் நேர்த்தியாக ஏற்பாடு செய்திருந்தனமர் தமிழர் நினைவெழுச்சி நாள் செயற்குழுவினர்.

காலை தொடக்கம் விடுதலைப் பாடல்கள் மற்றும் விடுதலைப் பாடல்களுக்குரிய நடனங்கள் மற்றும் உணர்வுபூர்வமான உரைகள் ஆகியள இடம்பெற்று. இறுதிவரை எவ்வித தொய்வும் இல்லாமல் நிகழ்வு நகர்ந்து சென்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வழமை போன்று மாவீர்களுக்கு வணக்கம் செலுத்தும் வகையில் ஆயிரக்கணக்கானவர்களின் படங்கள் மற்றும் அவமரம்கள் பற்றிய விபரங்கள் அனைத்து அங்கு காட்சிப்படுத்தப்படடிருந்தன. அவற்றை மக்கள் மிகவும் பொறுமையாகப் பார்த்து மரியாதை செலுத்தினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

*படங்களும் செய்தியும்:*
*கனடா உதயன் ஆசிரிய பீடக் குழுவினர்*







# கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் மாதாந்த உரையரங்கத்தை கண்டு களிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கப்பெறுகின்றனர்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் மாதாந்த உரையரங்கம் வரிசையில் டிசம்பர் மாதத்தின் எழுத்தாளர் அரங்கம் நிகழ்ச்சியில் கனடாவாழ் ஆய்வாளர் கலாநிதி கௌசல்யா சுப்பிரமணியம் அவர்களின் உரை இடம் பெறும். இதனைக் கண்டு களிக்க அனைவரும் அன்புடன் அழைக்கப்பெறுகின்றனர்.




TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5





# டில்லியில் தமிழர் பிரதிநிதிகள் – பேசியது என்ன?

## (உதயனின் பிரத்தியேகக் கட்டுரை)

**- நடராசா லோகதயாளன்**

இலங்கையிலிருந்து இந்நாள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகத்தினர், சமயத் தலைவர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட குழுவொன்று இந்தியத் தலைநகர் புதுடில்லி சென்றுள்ளது.

இந்த திடீர் பயணம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல புருவங்களை உயர்த்தியுள்ளது. அவர்கள் ஏன் சென்றார்கள், யாருடைய ஏற்பாட்டில் சென்றார்கள், யாரை சந்தித்தார்கள் என விரிவாக ஆராய்கிறது இந்த கட்டுரை.

தமிழர் தாயகப் பகுதியாக வடக்கு - கிழக்கிலிருந்து 9 பேர் கொண்ட குழு டில்லியை கடந்த புதன்கிழமை அதிகாலை சென்றடைந்துள்ளதாக அறிய முடிகிறது.

இந்தக் குழுவில் இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளரும் மற்றொரு யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவாஜிலிங்கம், ஞானமுத்து சிறிநேசன், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகளாக வேலன் சுவாமிகள் துரைசாமி தவசிலிங்கம் ஆகியோர் டில்லி சென்றுள்ளனர்.

இவர்களைத் தவிர அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸின் தலைவர் கிருஸ்ணபிள்ளை இளங்கோ, அமெரிக்க தமிழர் ஐக்கிய அரசியல் செயற்குழுவின் செயலாளர் கலாநிதி தாமோதரம்பிள்ளை சிவராஜ், ஐக்கிய அமெரிக்காவின் தமிழ் செயற்குழுவின் செயலாளர் சுந்தர் குப்புசுவாமி, உலக சமூக சேவை மையத்தின் அறங்காவலர் ஆர்.சி. கதிரவன் ஆகியோரும் டில்லியில் நடைபெறும் கலந்துரையாடல்களில் பங்குபற்றினர்.

தமது விஜயத்தின் முதல் நாளன்று இந்த குழுவினர், இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த சில உயர்மட்ட பிரதிநிதிகளை சந்தித்துள்ளதாக அறிய முடிகிறது. இந்திய வெளியுறவு துறையின் ராஜங்க அமைச்சர் கலாநிதி ராஜ்குமார் ரஞ்சன் சிங் அவர்களையும் சந்தித்து உரையாடியுள்ளனர். எனினும் இந்த கட்டுரை எழுதப்படும் வரை அந்த சந்திப்பு குறித்த விவரங்கள் வெளியாகவில்லை. இந்த எழுத்தாளர் டில்லி சென்றுள்ள பிரதிநிதிகளை தொடர்புகொண்ட போதிலும், பயணம் முடிந்த பிறகு கருத்து வெளியிடுவதே சரியாக இருக்கும் என்று தெரிவித்தனர்.

எனினும், பல வழிகளில் அங்கிருந்து சில தகவல்களை பெற முடிந்தது. புதுடில்லியில் செய்தியாளர்களை சந்தித்த போது தமிழர் தரப்பிலிருந்து கீழ்க்கண்ட கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன:

இலங்கை இந்திய ஒப்பந்தத்தினை முழுதாய் நடைமுறைப்படுத்துங்கள்.

தமிழர்களினதும், இந்தியாவினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அதுவே வழியென வடக்கு, கிழக்கு அரசியல், சிவில், புலம்பெயர் தரப்பினர் டில்லியின் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

வடக்கு, கிழக்கான தமிழர் தாயகப் பகுதிகளில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்திட இந்தியா வழி செய்ய வேண்டும், தற்காலிகமாக இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட இந்தியா உதவ வேண்டும், சிங்களப் பெரும்பான்மையினர் சீனாவின் பக்கம் திரும்புவதை இந்தியா கவனத்தில் எடுக்க வேண்டும் போன்ற விடயங்களை இந்தக் குழுவினர் டில்லி பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், தமிழர்களுக்கான அர்த்தமுள்ள நிரந்தர தீர்வினை வழங்குவதற்கான சர்வஜன வாக்கெடுப்பைச்செய்யவதற்கு இந்தியா வகிபாகமளிக்க வேண்டும் என்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாதுள்ளமையால் தற்காலிக ஏற்பாடாக இடைக்கால நிர்வாக சபையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

இந்தியா சென்றுள்ள தமிழர் தரப்பின் சார்பில் விக்னேஸ்வரனே ஊடகத்துறையினருடன் உரையாடி அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தார்.

"நாங்கள் இங்கு மூன்று விடயங்களை பிரதானமாக கூறுவதற்கு கடமைப்பட்டுள்ளோம். முதலாவதாக பூகோள ரீதியாக தாக்கம் செலுத்துகின்ற விடயமாகும். இலங்கையில் பெரும்பான்மை சிங்கள மக்களும் அவர்கள் வாழும் பகுதிகளும் சீனா சார்பு நிலையில் செயற்பட்டு வருகின்றார்கள். ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இந்தியாவின் தென் பகுதிக்கு அருகாமையில் உள்ளன. அத்தோடு கலாசார, சமய, மொழி உள்ளிட்ட பல்வேறு விடயங்களிலும் இந்தியாவுடன் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளது. அந்தவகையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பெரும்பான்மையானவர்கள் எங்களது கடவுள் இந்தியா எம்மை ஆதரவாக பார்த்துக்கொள்ளும் என்ற நிலைப்பாட்டில் நம்பிக்கையுடன் இருக்கின்றார்.

அதுமட்டுமன்றி, இந்த நம்பிக்கையானது, எமது பாதுகாப்பையும், இந்தியாவின் தென்பிராந்திய தேசிய பாதுகாப்பையும் உறுதி செய்வதாக உள்ளது".

இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் கேந்திர நலன்களுக்கு வடக்கு-கிழக்கில் தமிழர்களின் நல்வாழ்வு, அவர்களின் ஆட்சி மிகவும் முக்கியம் எனவும், தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழர்கள் பலமாக இருந்தால் மட்டுமே இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட பெரும் பங்காற்ற முடியும் எனவும் விக்னேஸ்வரன் அந்த ஊடகச் சந்திப்பில் வலியுறுத்தினார்.

"இந்த விடயம் பூகோள ரீதியாக முக்கியமானதாகும்.

இரண்டாவதாக, சிங்கள, பௌத்த திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்களுக்கு நாம் நேரடியான சாட்சியாளர்களாக இருக்கின்றோம். பிரித்தானிய காலனித்தத்துவம் முடிவுக்கு வந்தது. அதன்பின்னர் இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 21ஆவது பிரிவில் சிறுபான்மை மக்கள் பாகுபாட்டுக்கு உட்படுத்தப்படக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது.

அவ்வாறு இருக்கதக்கதாக, முதலில் இந்திய தமிழர்களின் பிரஜாவுரையை பறித்து அவர்களை நாடு கடத்தினார்கள். அதன் பின்னர் சிங்களம் மட்டும் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக இனக்கலவரங்கள் அரங்கேற்றப்பட்டு தமிழ் மக்கள் நாட்டிலிருந்து வெளியேறும் நிலைக்கு வலிந்து தள்ளப்பட்டார்கள். இதனால் தற்போது மில்லியன் கணக்கான தமிழ் மக்கள் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் நிலைமைகள் உருவாகியுள்ளன.

தொடர்ந்து எமது இளைஞர்கள், யுவதிகள் பல்கலைக்கழகங்களில் உள்நுழைவதை கட்டுப்படுத்தும் வகையில் தரப்படுத்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தோடு இலங்கை அரசாங்கத்தின் மிலேச்சத்தனமான செயற்பாடுகள் தொடர்ந்ததன் காரணமாக இளைஞர்கள் ஆயுதங்களை கையிலெடுத்தார்கள். விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்றன. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட ஆயுத ரீதியான போராட்டம் கடந்த முப்பது ஆண்டுகளாக நடைபெற்றிருந்தது".

போர் முடிவடைந்த பிறகும் இலங்கை அரசின் நிலைப்பாடு மற்றும் கொள்கைகளில் எவ்விதமான மாற்றங்களும் இல்லை என்பதையும் கோடிட்டு காட்டிய அவர், திட்டமிட்ட வகையில் சிங்கள அரசுகளால் எப்படி தமிழர் நிலங்கள் பறிக்கப்படுகின்றன, வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுகின்றன என்பதையும் விளக்கினார்.

"ஆயுதப்போராட்டம் நிறைவுக்கு வந்ததன் பின்னரும், தமிழர்களின் பூர்வீகப் பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்து சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளுதல், பௌத்த மதம் சார்ந்த நிர்மாணங்களை மேற்கொள்ளுதல் என்று திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்களை முன்னெடுத்து அரசாங்கம் கொள்கை ரீதியாக முன்னெடுத்து வருகின்றது.

அரசாங்கம் தொடர்ச்சியாக தமிழர்களை ஓரங்கட்டும் செயற்பாட்டை பல்வேறு வழிகளில் முன்னெடுத்து வருகின்றது. உதாரணமாக கூறுவதாக இருந்தால் போர் நிறைவுக்கு வந்ததன் பின்னரும் இராணுவத்துக்கான ஆட்சேர்ப்புக்கள் நடைபெறுகின்றன. பாரியளவான நிதி ஒதுக்கீடுகள் வரவு, செலவுத்திட்டத்தில் மேற்கொள்ளப்படுவதோடு தொடர்ச்சியாக அந்த ஒதுக்கீடு அதிகரிக்கப் படுகின்றது. இவ்வாறான நிலைமைகளால் வடக்கு, கிழக்கில் நிலைகொண்டுள்ள படைகள் தமிழர்களின் பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்கின்ற செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

தமிழர்கள் தொடர்ச்சியாக ஒடுக்கப் படுவதோடு மட்டுமின்றி, அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகின்றனர் என்று கூறிய வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர், இராணுவப் புலனாய்வாளர்கள் எவ்வகையில் நெருக்கடிகளை கொடுக்கின்றனர் என்பதையும் விளக்கினார்.

"புலனாய்வாளர்களின் பிரசன்னங்கள், பாதுகாப்பு கெடுபிடிகள் உள்ளிட்டவையும் நீடிக்கின்ன. அதேபோன்று வடக்கு, கிழக்கு கடற்றொழிலாளர்கள், பிற பகுதிகளில் இருந்து படைகளின் உதவிகளுடன் இதேபோன்று பௌத்த தேரர்கள் தமது விரிவாக்கங்களைச் செய்து வருகின்றார்கள். ஆயிரக்கணக்கான இந்துக் கோவில்கள் அழிக்கப்பட்டுள்ளன. இந்துக்களின் தொல்பொருள் பகுதிகள் சிங்கள, பௌத்தர்களுக்குச் சொந்தமானவையாக அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்தச் செயற்பாடுகளை பௌத்த தேரர்கள் முன்னெடுக்கின்றார்கள். அவர்கள் மிகவும் சக்தி வாய்ந்தவர்களாக காணப்படுகின்றார்கள். அவர்களை கட்டுப்படுத்தவதற்கு யாருக்கும் அதிகரங்கள் காணப்படவில்லை. அதேபோன்று ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற தரப்புக்கள் இதுவரையில் தண்டனைக்கு உட்படுத்தப்படாத நிலைமைகளும் நீடிக்கின்றன.

மூன்றாவதான விடயம், தமிழர்களுக்கச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பதும், அபகரிப்பதாகும். 1978ஆம் ஆண்டு இலங்கையின் மிகப்பெரும் நதியான மகாவலி நீர் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு கொண்டுவரப்பட்டு நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனால் நாம் மகிழ்ச்சி அடைந்தாலும், மகாவலி அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் தற்போது வரையில் ஒருதுளி நீர் கூட வடக்கு மாகாணத்துக்கு கொண்டுவரவில்லை. அவ்வாறு கொண்டுவருவதற்கு சாதமான நிலைமைகள் இல்லை என்று எமது பொறியியலாளர்கள் உறுதிப்படுத்தியும் உள்ளனர். இவ்வாறான நிலையில், மகாவலி திட்டத்தின் பெயரால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளில் தென்னிலங்கையில் இருந்து சிங்கள மக்கள் வரவழைக்கப்பட்டு குடியேற்றப்பட்டு வருகின்றார்கள். இந்த நிலைமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அத்துடன், அரச திணைக்களங்களும் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகளுக்கும் ஆபகரிப்புச் நடவடிக்கைகளுக்கும் துணையாக உள்ளன. இவ்விதமான பிரச்சினைகள் சமகாலத்தில் தீவிரமடைவதால் நாம் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றோம்".

ஆகவே இந்த விடயங்கள் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழ் மக்களின் பூர்வீகமான பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதோடு, அவர்களுக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டியதும் அவசியமாகின்றது.

தமிழர்கள் தமது பூர்வீக நிலங்களில் பாதுகாக்கப்படுவதும், அவர்களுக்கான நீதி நிலைநாட்டப்படுவதும் உறுதி செய்யப்பட வேண்டுமாக இருந்தால், அதற்கான வகிபாகத்தை இந்தியாவாலேயே மேற்கொள்ள முடியும். இவ்விதமான நிலைமைகள் மூன்று தசாப்தத்துக்கு முன்னதாகவே காணப்பட்டமையை உணர்ந்த காரணத்தினால் தான் இந்தியா, இலங்கையுடன் ஒப்பந்தத்தினை மேற்கொண்டது. அந்த ஒப்பந்தம் தற்போது வரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு தமிழர்கள் தற்போது பாதுகாப்பற்ற நிலைமையை உணர்ந்துள்ளார்கள். அவர்களின் விடயங்களில் கரிசனைகளைக் கொள்வதற்கு சரியானதொரு நிறுவனக் கட்டமைப்பு காணப்படவில்லை. ஆகவே இந்திய, இலங்கை ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.



அதேநேரம், 13ஆவது திருத்தச்சட்டம் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கான நிரந்தரமான தீர்வாக அமையாது விட்டாலும், தமிழர்களின் கையில் சிறுஅதிகாரத்தை அளிக்கும் வகையிலான மாகாண சபைக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. ஆனால் கடந்த ஐந்து வருடங்களாக மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படவில்லை. அதனடிப்படையில், இந்தியா, தமிழர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும், சிக்கலான சூழல்களும் நன்றாகவே அறிந்துள்ளது. ஆகவே அதற்கான அர்த்தபூர்வமான தீர்வினை வழங்குவதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதில் இந்தியாவின் வகிபாகம் மிகவும் முக்கியமானது என்றார் விக்னேஸ்வரன்.

மேலும் தொடர்ச்சியாக மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாமையில் தமிழர்களுக்கான நிர்வாகக் கட்டமைப்பொன்று காணப்படாதுள்ள நிலையில், தற்காலிக ஏற்பாடாக இடைகால நிர்வாக சபையொன்றை ஸ்தாபித்தற்கும் இந்தியாவின் வகிபாகம் முக்கியமானதாகின்றது.

அதுமட்டுமன்றி, இந்தியா, இலங்கையுடன் 1987ஆம் ஆண்டு மேற்கொண்ட ஒப்பந்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவன் ஊடாக இந்தியா தனது தென்பிராந்தியத்தின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு, வடக்கு,கிழக்கு தமிழர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக்கொடுக்க முடியும் என்றார்.

இந்த குழுவினர் டில்லியில் மூத்த அமைச்சர்கள், அதிகாரிகள், செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் ஆகியோரையும் சந்திக்கவுள்ளதாக அறிய முடிகிறது.

# பரவலாகவும் அதிகளவிலும் அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் நாள்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



கடந்த திங்கட்கிழமை கிழக்கில் மாவடி முன்மாரி மாவீரர் துயிலுமில்லத்தில் போலீசாரின் கெடுபிடிகள் அதிகமாக இருந்தன. ஏற்பாட்டுக் குழுவுக்கு தலைமை தாங்கிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியேந்திரனைக் கூப்பிடுவதும் விசாரிப்பதுமாக இருந்தார்கள். கொடிகளைக் கட்டக்கூடாது மக்கள் ஒன்றாகத் திரளக் கூடாது விடுதலைப் புலிகளை நினைவூட்டும் சின்னங்களை பயன்படுத்தக் கூடாது; என்றெல்லாம் தொடர்ச்சியாக அறிவுறுத்திக் கொண்டிருந்தார்கள். ஏற்பாட்டாளர்களை அழைத்து விசாரிப்பது என்ற சாட்டில் ஏற்பாடுகளைக் குழப்ப முயற்சித்திருக்கிறார்கள். ஆனால் அங்கு கூடிய ஆயிரத்துக்கும் குறையாத மக்கள் அமைதியாக எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நின்றிருக்கிறார்கள். ஒலிபெருக்கியில் பொதுவான அறிவிப்பு இன்றி, மணியோசை இன்றி, வணங்கப் பாடல் இன்றி, இயல்பாகவே ஆறு மணி ஐந்து நிமிடத்திற்கு பந்தங்களுக்கு நேரே வந்து நின்று, சுடர்களை ஏற்றியிருக்கிறார்கள். போலீசார் தங்கள் பாட்டுக்கு குழப்பிக்கொண்டே இருக்க மக்கள் தங்கள் பாட்டுக்கு குறித்த நேரத்தில் சுடர்களை ஏற்றியிருக்கிறார்கள்.

கிழக்கில் மற்றொரு துயிலுமில்லமாகிய, தரவை துயிலுமில்லத்தில் எடுக்கப்பட்ட ஒரு காணொளியில், வணக்க நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருந்த பொழுது போலீசார் அங்கு கட்டப்பட்டிருந்த சிவப்பு மஞ்சள் கொடிகளை அறுக்கிறார்கள். ஜனங்கள் அதை அமைதியாக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கஜேந்திரன், சாணக்கியன் ஆகிய இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே பிரசன்னமாகியிருக்கிறார்கள். ஆனால் போலீசார் அவர்களைப் பொருட்படுத்தவே இல்லை. சூழ்ந்திருந்த மக்களின் கண்ணீரையும் பொருட்படுத்தவில்லை. இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் போலீசாரோடு வாக்குவாதப்படுகிறார்கள். ஆனால் போலீசார் அவர்கள் கூறுவதை கேட்கவில்லை. தாங்கள் செய்ய வந்ததை நிறுத்தவும் இல்லை.

ஏற்கனவே அதே துயிலுமில்லத்தில் கட்டப்பட்டிருந்த ஒரு பொதுச்சுடர் பீடத்தை அண்மையில் போலீசார் உடைத்து விட்டார்கள். அது வனவளத் திணைக்களத்துக்கு உரிய காணி என்பதனால், அங்கு திணைக்களத்தின் அனுமதியின்றி கட்டுமானங்களைச் செய்ய முடியாது என்ற சட்டக் காரணத்தை முன்வைத்து, போலீசார் அதைச் செய்ய முடிந்தது. அப்படிச் செய்தும் அத்துயிலுமில்லத்துக்கு மக்கள் வருவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. அதன்பின் மக்கள் வணக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் பொழுதே அவர்கள் கொடிகளை அறுத்தார்கள். ஆனாலும் மக்கள் அமைதியாக தங்கள் வந்த காரியத்தை செய்து முடித்தார்கள்.

இதுதான் மக்கள் மயப்பட்ட நினைவு கூர்தல். யாரும் உத்தரவிடாமல் யாருடைய அழைப்புக்கும் காத்திருக்காமல் வணக்கப் பாடல் இல்லாத போதிலும் மணியோசை கேட்காத போதிலும் ஒலிபெருக்கி இயங்காத போதிலும் மழை தூறிக் கொண்டிருந்த போதிலும் இயல்பாகவே குறித்த நேரத்தில் வணக்கத்தை செலுத்துவது.

தமது மதம் சார்ந்த விரதங்களையும் சடங்குகளையும் விழாக்களையும் மக்கள் அப்படித்தான் செய்கிறார்கள். அது ஒரு பண்பாடாக வாழ்க்கை முறையாக மாறியிருக்கிறது. அப்படித்தான் நினைவு நாட்களையும் நினைவு கூர்தலையும் தமிழ் அரசியல் பண்பாட்டின் பிரிக்கப்படவியலாத பகுதிகளாக மாற்ற வேண்டும்.

ஏற்பாட்டாளர்கள் இருந்தால் நல்லது. ஏற்பாட்டுக் குழு இருந்தால் நல்லது. ஆனால் ஏற்பாட்டுக் குழுவோ ஏற்பாட்டாளர்களோ இயங்க முடியாத ஒரு சட்டச் சூழலில், மக்கள் இயல்பாகவே அதைச் செய்யுமளவுக்கு நினைவு கூர்தலை மக்கள் மயப்படுத்த வேண்டும்.

இம்முறை வடக்கில் நீதிமன்றங்கள் நினைவு கூர்தலுக்குச் சாதகமாகத் தீர்ப்புகளை வழங்கியிருந்தன. ஆனால் கிழக்கில் நிலைமை அவ்வாறு இருக்கவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கிழக்கில் இம்முறை அதிக கவனம் செலுத்தியது. கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கிழக்கில் பிரசன்னமாகி இருந்தனர்.

போலீசார் கிழக்கில் மாவீரர் நாளை தடுப்பதற்கு அதிக பிரயத்தனம் எடுத்தார்கள். கஞ்சி குடியாறு துயிலுமில்லத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரக்குமாரை போலீசார் நகர விடாமல் தடுக்க முற்பட்டார்கள். விடுதலைப் புலிகளை நினைவூட்டும் கொடி, படம் சின்னம் போன்றவற்றைத் தேடித் தேடி அகற்றினார்கள். அவர்களுடைய கண்ணில் பட்டதெல்லாம் சிவப்பு மஞ்சள் கொடிதான்.

சிவப்பு மஞ்சள் கொடி நல்லிணக்கத்துக்கு எதிரானது என்றால் வன்னியில் நிறுவப்பட்டிருக்கும் யுத்த வெற்றி நினைவுச்சின்னங்கள் நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்புமா? நாடாளுமன்றத்தில் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அதைச் சுட்டிக்காட்டிப் பேசியுள்ளார்.

குறிப்பாக ஆனையிறவில் நிறுவப் பட்டிருக்கும் நினைவுச் சின்னம் இருப்பவற்றில் பிரம்மாண்டமானது. உயரமான ஒரு பீடத்தில் தொலைவிலிருந்து பார்க்கத்தக்கதாக ஒரு வெட்டையில் அது கட்டப்பட்டிருக்கிறது. அதில் நான்கு கைகள் இலங்கைத் தீவை தூக்கி வைத்திருப்பதாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த நான்கு கைகளும் நான்கு இனங்களைக் குறிக்குமா? என்று ஒரு தமிழ் ஊடகவியலாளர் அந்த நினைவுச் சின்னத்துக்கு அருகே நின்ற ஒரு ராணுவ அதிகாரியிடம் முன்பொருமுறை கேட்டிருக்கிறார். அதற்கு அந்த ராணுவ அதிகாரி சொன்னாராம் "இல்லை இல்லை அது நான்கு இனங்களையும் குறிக்கவில்லை, நான்கு படைகளையுங் குறிக்கிறது" என்று. மூன்று படைகள் தானே உண்டு என்று அந்த ஊடகவியலாளர் கேட்டபோது, நாலாவது சிறப்பு அதிரடிப் படை என்று பதில் வந்திருக்கிறது. அப்படியென்றால் நான்கு படைகளுந்தான் இலங்கைத் தீவை தூக்கி வைத்திருக்கின்றன. நான்கு இனங்களும் அல்ல. இது எப்படி நல்லிணக்கத்தை உண்டாக்கும்?

ஆனால் சிவப்பு மஞ்சு மஞ்சள் மஞ்சள் கொடியை போலீசார் விரோதமாக பார்க்கிறார்கள். அந்த கொடியைத் தேடித் தேடி அகற்றினார்கள். ஆனால் அந்த கொடியில் உள்ள நிறங்கள் ஆயுதப் போராட்டத்திற்கு முன்னரே இருந்தன. தமிழரசு கட்சியின் கொடியில் அந்த நிறங்கள் உண்டு. தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் அது உண்டு. ஆனால் போலீசார் சிவப்பு மஞ்சள் கொடியானது தமிழ் எதிர்ப்பைப் பிரதிபலிப்பதாகக் கருதுகிறீர்களா? வடக்கில் நீதிமன்றங்கள் அனுமதி வழங்கிய பின்னரும் போலீசார் ஆங்காங்கே இடையூறுகளை விளைவித்தார்கள்.

ஆனால் இந்த தடைகளையும் எதிர்ப்புக்களையும் தாண்டி; அச்சுறுத்தல்களைத் தாண்டி; மக்கள் துயிலுமில்லங்களை நோக்கித் திரண்டார்கள். அதாவது இந்த தடைகளும் அச்சுறுத்தல்களும் மக்களை பின்வாங்கச் செய்யவில்லை. மக்களை மேலும் வேகமடையச் செய்தன என்பதே உண்மை. போலீசார் அதை எதிர்பார்த்திருந்தார்களோ தெரியவில்லை.

குறிப்பாக, தாயகத்தில், செல்∴பி யுகத்தின் இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் இந்த முறை துயிலுமில்லங்களை நோக்கி வந்தார்கள். அவர்கள் அதன் அரசியல் பரிமாணத்தை முழுமையாக விளங்கியிருப்பார்கள் என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் அவர்கள் அதிகரித்த அளவில் துயிலுமில்லங்களை நோக்கி வந்தார்கள். அங்கே அவர்கள் செல்∴பி எடுத்தார்கள். அந்த இடத்தில் சிந்தப்பட்ட கண்ணீருக்கு அது பொருத்தமாயிருக்கவில்லை. ஆனாலும் அந்த தலைமுறை நினைவு கூர்தலை நோக்கி ஈர்க்கப்படுகிறது.

எந்த நினைவு நாள் அதிகம் மக்கள் மயப்படக் கூடாது என்று போலீசார் தடுக்க முற்பட்டார்களோ, அதே நினைவு நாள் அவர்களுடைய கையை மீறி மக்கள் மயப்படுகிறது என்பதைத்தான் கடந்த திங்கட்கிழமை நிரூபித்தது.

கடந்த திங்கட்கிழமை மாவீரர் நாளில் அன்று, யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பத்திரிகையாகிய உதயன் பத்திரிகையின் ஆசிரியர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். மூன்று ஆண்டுகளுக்கு முன் அதாவது 2020 ஆம் ஆண்டு நொவம்பர் 26ஆம் திகதி உதயன் பத்திரிகை பிரசுரித்த இரண்டு செய்திக் குறிப்புகள் தொடர்பாகவே அந்த விசாரணை. அதில் ஒரு செய்திக் குறிப்பு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்தநாள் பற்றியது. அதில் அவருடைய படமும் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அடுத்த செய்தி குறிப்பு அவருடைய பிறந்தநாளுக்கு அடுத்த நாள் வரும் மாவீரர் நாள் பற்றியது.

இந்த இரண்டு செய்திகளையும் பிரசுரித்தமைக்காக. இப்பொழுது, மூன்று ஆண்டுகளின் பின் பத்திரிகையின் ஆசிரியர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். கிரிலப்பனையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் தலைமையகத்தில் நடந்த அந்த விசாரணை 4 மணித்தியாலங்கள் நீடித்தது. அந்த விசாரணையின் போது பயங்கரவாத இயக்கம் ஒன்றை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தும் விதத்தில் இப்படிப்பட்ட செய்திகளை நீங்கள் பிரசுரிக்கிறீர்களா என்ற அர்த்தத்தில் அவரிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் மாவீரர் நாளை மக்கள் மயப்படுத்துவது இப்பொழுது ஸ்ரீலங்கா போலீஸ் தரப்பும்தான். அவர்கள் எதைத் தடுக்க முற்படுகிறார்களோ, அதற்கு எதிராக மக்கள் அதனைத் தாமாகச் செய்ய தொடங்கி விட்டார்கள்.

## அவன் வருவான்

----------------------------

பட்டுடுத்தி பூச்சூடிய பருவப் பெண்போன்ற
மரங்களை நிர்வாண மாக்க அவன்வருவான்
வாசனை வீசிடும் வண்ணமலர்த் தோட்டத்தை
வாட்டி வதைக்க அவன் வருவான்
பச்சைக் கம்பளம் போலிருந்த பசுந்தரையை
பொசுக்கி அழிக்க அவன் வருவான்
கனிதரும் மரங்களை காய்தரும் செடிகளை
கசக்கிப் பிழிய அவன் வருவான்
பலவகைப் பறவை இனங்களையும்
பரதேசம் அனுப்ப அவன் வருவான்
பட்டுமேனி கொண்ட குட்டி முயல்களை
பொந்துக்குள் முடக்க அவன் வருவான்
அழகிய தெருக்களை அழித்தொழிக்க
அவன் வருவான்
கோயில் திருவிழாக் கொண்டாட்டம்
குறைக்க அவன் வருவான்
பொல்லுடன் உலாவிய பல்லில்லா முதியவரை
மூலையில் முடக்க அவன் வருவான்
குட்டை உடையுடன் குலாவித் திரிந்த
பட்டுமேனிக் குமரிகளை
குளிருடைக் கூட்டுக்குள் அடைக்க
அவன் வருவான்
ஊழிக் காற்றையும் குளிரையும்
உடன்கூட்டி அவன் வருவான்
குளிர்காலம் என்னும் துச்சாதனன்
விரைவில் துகிலுரிய் வருவானே!

----------------------------

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

# MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

**மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....**

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

**416-613-2788 / 416-816-9011**

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

## ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

**Team Leader/Mortgage & Real Estate Broker**

## Cell : 416-624-4843

எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# HIGH SKY CANADA

- Visitor visas, Study visas, and Work Visas Applications
- Convert to WORK PERMIT from other status (Visitor)
- PR and Citizenship Application
- IELTS/ CELPIP/ CAEL Preparation
- Traffic Tickets and Pardon
- Tutoring for Students- ALL SUBJECTS, including TAMIL

CONTACT NOW!

Phone number/WhatsApp:
**+1 (437) 365-5668**
Email: highskycanada@gmail.com


EASY FURNITURE
ஈஸி ஃபர்னிச்சர்
Markham Convention Centre
McNicoll Ave
ARMDALE
Dynamic Dr
Tapscott Rd
ORDER TODAY 416-293-9204
easyfurniture
easyfurnitureca
MON - FRI 11:00AM - 8:00PM
SAT & SUN 11:00AM - 6:00PM
Winter
Special Sale
நம்பி வாங்க!
சந்தோஷமா போங்க...
3 Pcs Sofa Set
Sofa & Love Seat $649
3 Pc Sofa $749
Single Bed $145
8 Pcs Bedroom Set
Queen Bed Dresser Mirror
5 Pcs Bedroom Set $1299
3 Pcs Sofa Set Air Leather Recliners
Sofa & Love Seat $1049
Bunk Bed $449
8 Pcs Bedroom Set
Queen Bed Dresser Mirror
5 Pcs Bedroom Set $1349
8 Pcs Bedroom Set
Queen Bed Dresser Mirror
5 Pcs Bedroom Set $1399
Folding Bed $149
Including Free Ottoman
Sectional Sofa $849
Sofa Bed $649
Queen Size Leather Bed $199
5 Pcs
Dining Table $399
Bunk Bed with Storage $899
7 Pcs
Dining Table $549
5 Pcs
Dining Table $399
Coffee Table $89
L Sectional Sofa $399
Sami Madam
Price Starting from $99
We Can Make Special Order
Free Ottoman Starting From $59
Coffee Table $89
5" Single Foam $59
Dreamopedic Single Mattress $149
Rest-O-Pedic Queen $249
Velvet Rose Queen Mattress $299
Wardrobe Starting From $199
3500 McNicoll Ave, Unit 5, Scarborough, ON M1V 5C7
நாங்களே உற்பத்தி செய்து விரும்பிய அளவுகளில் செய்து கொடுக்கிறோம்

# 9 ஆண்டுகள் பறந்தோடி போனதுவே
## மீண்டும் பிறப்பாயா மறையாத மாண்பினனே



மண்ணில்:
29-02-1968

விண்ணில்:
03-12-2014

# அமரர். சத்தியபவான் சத்தியசீலன்
# (பவான்)

**(ஐயனார் கோவிலடி சுருவில்)**

**(முன்னாள் வீடியோ கலைஞர், தொழில்நுட்பவியலாளர்)**

ஆண்டுகள் ஒன்றல்ல, 9 ஆண்டுகள் போய்விட்டதே
போனது எங்கே என்று பேதலிக்கும் எமக்கு
நானது இங்கேதான் என்று அடிக்கடி காட்டும் உன் நிழல்
எம் கண் முன்னே அடிக்கடி வந்து போகும்
பாவி நாம் பரிதவிக்க பக்குவமாய் போய் சேர்ந்தீரே
பொழுது புலர்கின்ற வேளைதனில் ஏங்க வைத்தாய்
உன் செய்தி எப்படி மறப்போம்
என்றும் நீ எம்முடன் வாழுகின்றாய் என்ற நினைவுடன்
மலர் தூவி பிரர்த்திப்போம்

*என்றும் உன் நினைவுடன் வாழும்*
*குடும்பங்கள்*


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# போர் முடிவடைந்த பின்னர் மிகச்சிறந்த நிலைக்கு செல்லவேண்டிய நாடு, இன்றைக்கு தலைகுப்புற விழுந்திருக்கிறதென்பது, உயிரிழந்த தமிழர் ஆத்மாக்களின் சாபங்களேயாகும்

## பாராளுமன்றத்தில் இன்று நடைபெற்ற விவாதத்தின்போது பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய ஆணித்தரமான உரை



பொதுநிர்வாக அமைச்சுக்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் 28-11-2023 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய ஆணித்தரமான உரையில் அரசாங்கத்தை கடுமையாகவும் சிந்திக்கக் கூடிய வகையிலும் சாடினோர்.

நினைவேந்தல்கள் மூலம் மக்கள் தமது மரியாதைகளை செலுத்துவதற்குரிய வகையில் இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ள துயிலுமில்ல காணிகள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும்.

நினைவேந்தல் உரிமையை அங்கீகரிப்பது நல்லிணக்கத்துக்கு மிக முக்கியமான விடயமாகும். இவ்விடயம் நிலைமாறுகால நீதி பொறிமுறையின் ஐந்தாவது தூணுமாகும். நினைவுகூருகின்ற துயிலுமில்லங்களை அழிப்பதோ, அல்லது நினைவேந்தல்களைத் தடைசெய்வதோ மனித குலத்துக்கு எதிரான போர்க்குற்றமாகும். ஆகவே - இது தொடர்வதற்கு அனுமதிக்கமுடியாது. போர் முடிவடைந்துது 15 வருடங்கள் ஆகிவிட்டன. ஜே.வி.பி.க்கு அவர்களுடைய ஆயுதப் போராட்டம் முடிவடைந்து ஒருசில வருடங்களுக்குள்ளேயே அவர்களை நினைவு கூர அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், தங்களுக்காக உயிர்நீத்தவர்களை நினைவுகூர விடாமல் தமிழ் மக்களைத் தடுப்பது என்பது இனவாதத்தைத் தவிர வேறொன்றுமாக இருக்க முடியாது. ஜே.வி.பி. சிங்கள அமைப்பு என்பதற்காக அனுமதிக்கிறீர்கள். ஆனால் தமிழர்கள் என்ற வகையில் எமது நினைவேந்தல்களை திட்டமிட்டுத் தடுக்கிறீகள்.

இப்படிப்பட்ட பாரபட்சங்களை நீங்கள் நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

போர் முடிவடைந்த பின்னர் மிகச்சிறந்த நிலைக்கு செல்லவேண்டிய நாடு, இன்றைக்கு தலைகுப்புற விழுந்திருக்கிறதென்பது, உயிரிழந்த ஆத்மாக்களின் சாபங்களேயாகும். புத்த பெருமான கூட வெட்கித் தலைகுனியக்கூடிய அளவுக்குத் தான் உங்கள் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இனவழிப்பை செய்தவர்களை காவலர்களாக சிங்கள மக்கள் கருதினார்கள். ஆனால் இன்று சிங்கள மக்களுக்கே துரோகம் அளித்தவர்கள் என்ற அடிப்படையில், அவர்கள் அந்த மக்களாலேயே துரத்தியடிக்கப்பட்டனர். இனியாவது விளங்கிக்கொண்டு, உங்களின் மிக மோசமான இனவாதப் பாதையை விட்டு திருத்திக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 1989 ஆண்டு புதிய பிரதேச செயலர் பிரிவாக அங்கீகரிக்கப்பட்டது. 1993 இல் அமைச்சரவைப் பத்திரத்தினூடாக அங்கீகரிக்கப்பட்ட தனி பிரதேச செயலாளர் பிரிவாக இயங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டு அது உத்தியோகபூர்வமாக இயங்கி வந்தது. காலப்போக்கில், முழுமையாக பிரதேச செயலாளர் பிரிவாக இயங்குவதற்குரிய கணக்காளர் போன்ற முக்கியமான நியமனங்களை அதற்கென வழங்காமல், அரசியல் காரணங்களுக்காக கல்முனை முஸ்லிம் பிரதேச செயலர் பிரிவுக்கு நியமனம் செய்து கல்முனை வடக்கு பிரதேச செயலம் உப பிரிவாகவே செயற்பட்டு வருகின்றது.

இதனால் மக்களுக்கு தேவையான நிர்வாகத்தை நடத்தமுடியாமலும், அரசியல் காரணங்களால் பழிவாங்கல்களும் நடைபெற்று வருகின்ற நிலையில், கடுமையான பாதிப்புக்களை தமிழ் மக்கள் சந்திக்கிறார்கள். இதன் காரணமாக, ஏற்கனவே வர்த்தமானி மூலம் அங்கீகரிக்கப்பட்டு எடுக்கப்பட்டிருந்த முடிவை அமுல்படுத்துவதற்கு இன்றைக்காவது நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். இந்தவிடயத்தை பல வருடங்களாக கேட்டுக் கொண்டு வருகின்றோம். ஆனாலும் எதுவும் நடைபெறாமல் உள்ளது. இதனை தடுத்து நிறுத்துவதற்கு எந்தவொரு நியாயமான காரணங்களும் கிடையாது.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் வாழும் ஏனைய பிரதேசங்களில் முஸ்லிம் பிரிவுகள், சிங்களப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. சட்டவிரோத குடியேற்றங்கள் நடந்திருந்தும்கூட அந்த சட்டவிரோதமான செயலை சட்டபூர்வமாக்குகின்ற வகையில் அந்தப் பிரிவுகளை உருவாக்க முடியுமானால், இயல்பாகவே - பூர்வீகமாக வாழ்ந்துவந்த தமிழ் மக்களுடைய பிரதேச செயலகர் பிரிவை அங்கீகரிக்க ஏன் உங்களால் முடியாதுள்ளது? என்ற கேள்வியை பிரதமர் அவர்களுடைய பொதுநிர்வாக அமைச்சுக்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்று உலகத்துக்கு நல்லிணக்கத்தைப் பற்றி பேசுகின்ற நீங்கள் இதையாவது செய்யுங்கள். அரசியல் காரணங்களுக்காக - இந்த அநியாயங்கள் தமிழ் மக்களுக்கு தொடர்வதை அனுமதிக்கவேண்டாம். வேறு தரப்புகளுக்கு கிடைக்கக் கூடிய அங்கீகாரங்களை நாம் ஒருபோதும் தடுப்பவர்களல்ல. எங்களுக்கு தேவைப்படும் விடயத்தையே நாங்கள் கேட்கின்றோம்.

அடுத்த விடயமாக - கடந்த ஒரு வாரமாக மாவீரர் வார நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. மாவீரர் வாரத்தின் இறுதி நாளான 27 ஆம் திகதி, வடக்கு கிழக்கு முழுவதிலும் - தமிழ் மக்கள் தங்களது எதிர்காலத்துக்காக உயிர்த்தியாகம் செய்த உறவுகளை நினைவு கூர்ந்து வந்திருந்தனர். தாங்களாகவே தங்களது சொந்த செலவில் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட நிலையில் - சிறிலங்கா அரசின் இனவாத போக்கால் அனைத்து துயிலும் இல்லங்களிலும் நினைவேந்தல்களைத் தடைசெய்யவதற்காக - பொலிசார் நீதிமன்றங்களை நாடும் முயற்சிகள் நடைபெற்றிருந்தன. நீதிமன்றங்கள் தடைகளை வழங்கியிருந்தாலும், பின்னர் எங்களது நியாயங்களை பதிவு செய்து அந்தத் தடையை நீக்க நாங்கள் கோரியிருந்த நிலையில், வடக்கு கிழக்கில் உள்ள நீதிமன்றங்கள் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களை நினைவுகூராமல் நினைவேந்தலை செய்யமுடியும் என்றே தீர்ப்புகளை வழங்கியிருந்தது. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை சம்பூரில் மட்டும் தான் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதனை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரியிருந்தும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது. அம்பாறையில் நினைவேந்தலை தடைசெய்யுமாறு கோரியிருந்த பொலிசாரின் கோரிக்கை நிராகரிக்கபட்டிருந்தது. மட்டக்களப்பில் தடைசெய்யப்பட்ட அமைப்பையோ அடையாளங்களையோ நினைவு கூரக்கூடாது என்றே தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அப்படியிருக்க , கிழக்கு மாகாணத்தில் முழுமையாக தடை வழங்கப்பட்டிராதபோதும் பொலிசார் குறித்த நிகழ்வுகளை குழப்பும் வகையிலேயே செயற்பட்டிருந்தனர். பல இடங்களில் துயிலுமில்ல காணிகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு படுமோசமாக அவமதிக்கின்ற செயற்பாடுகள் நடைபெற்றிருந்தன. அனைத்து துயிலுமில்லங்களிலும் இருந்த கல்லறைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. தனியாரின் காணிகளில் தனியாருடைய அனுமதி பெற்று நினைவேுந்தல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும் கூட நினைவேந்தல்கள் செய்வதற்கு பொலிசாரால் அனுமதி மறுக்கப்பட்டது. ஆகவே இவையெல்லாவற்றையும் கருத்தில் கொண்டு, இந்த அரசாங்கம் துயிலுமில்லங்கள் அமைந்திருந்த அரச காணிகள் அனைத்தையும் நினைவேந்தல் செய்வதற்குரிய காணிகளாக அங்கீகரித்து அதற்கென ஒதுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளை, நினைவேந்தல்கள் மூலம் மக்கள் தமது மரியாதைகளை செலுத்துவதற்குரிய வகையில் இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ள துயிலுமில்ல காணிகள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும்.

நினைவேந்தல் உரிமையை அங்கீகரிப்பது நல்லிணக்கத்துக்கு மிக முக்கியமான விடயமாகும். இவ்விடயம் நிலைமாறுகால நீதி பொறிமுறையின் ஐந்தாவது தூணுமாகும். நினைவுகூருகின்ற துயிலுமில்லங்களை அழிப்பதோ, அல்லது நினைவேந்தல்களைத் தடைசெய்வதோ மனித குலத்துக்கு எதிரான போர்க்குற்றமாகும். ஆகவே - இது தொடர்வதற்கு அனுமதிக்கமுடியாது. போர் முடிவடைந்துது 15 வருடங்கள் ஆகிவிட்டன. ஜே.வி.பி.க்கு அவர்களுடைய ஆயுதப் போராட்டம் முடிவடைந்து ஒருசில வருடங்களுக்குள்ளேயே அவர்களை நினைவு கூர அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், தங்களுக்காக உயிர்நீத்தவர்களை நினைவுகூர விடாமல் தமிழ் மக்களைத் தடுப்பது என்பது இனவாதத்தைத் தவிர வேறொன்றுமாக இருக்க முடியாது. ஜே.வி.பி. சிங்கள அமைப்பு என்பதற்காக அனுமதிக்கிறீர்கள். ஆனால் தமிழர்கள் என்ற வகையில் எமது நினைவேந்தல்களை திட்டமிட்டுத் தடுக்கிறீகள்.

இப்படிப்பட்ட பாரபட்சங்களை நீங்கள் நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

போர் முடிவடைந்த பின்னர் மிகச்சிறந்த நிலைக்கு செல்லவேண்டிய நாடு, இன்றைக்கு தலைகுப்புற விழுந்திருக்கிறதென்பது, உயிரிழந்த ஆத்மாக்களின் சாபங்களேயாகும். புத்த பெருமான கூட வெட்கித் தலைகுனியக்கூடிய அளவுக்குத் தான் உங்கள் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இனவழிப்பை செய்தவர்களை காவலர்களாக சிங்கள மக்கள் கருதினார்கள். ஆனால் இன்று சிங்கள மக்களுக்கே துரோகம் அளித்தவர்கள் என்ற அடிப்படையில், அவர்கள் அந்த மக்களாலேயே துரத்தியடிக்கப்பட்டனர். இனியாவது விளங்கிக்கொண்டு, உங்களின் மிக மோசமான இனவாதப் பாதையை விட்டு திருத்திக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

# இலங்கையிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட சுமார் 2.20 கோடி மதிப்பிலான 3.5 கிலோ கடத்தல் தங்கம் பாம்பன் அருகே பறிமுதல்:

## நால்வர் தப்பி ஓட்டம்

**- மன்னார் நிருபர் (29-11-2023)**

இலங்கையில் இருந்து படகு மூலம் கடத்திச் செல்லப்பட்ட சுமார் 2.20 கோடி மதிப்பிலான 3.5 கிலோ கடத்தல் தங்கம் பாம்பன் அருகே பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மத்திய சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலையடுத்து ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

இதன் போது புதன்கிழமை (29) அதிகாலை 4 மணியளவில் ஒரு நாட்டுப் படகு சந்தேகத்திற்கிடமாக இந்தியா பாம்பன் அருகே நின்றது. அதனையடுத்து படத்திலிருந்து நான்கு பேரும் கரையை நோக்கி வரும் போது மறைந்து இருந்த அதிகாரிகள் அவர்களை பிடிக்க முயன்ற போது தாங்கள் கொண்டு வந்த பொதியை படகில் விட்டு கடலில் குதித்து தப்பினார்.

பின்னர் கடலில் நிறுத்தப்பட்டிருந்த படகை சோதனை செய்தபோது அதில் சுமார் 3.5 கிலோ கடத்தல் தங்க கட்டிகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து கடத்தலுக்கு பயன்படுத்திய நாட்டுப் படகை பறிமுதல் செய்த சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தை ராமேஸ்வரம் சுங்கத்துறை அலுவலகத்தில் கொண்டு சென்று சோதனை செய்தனர்.



மேலும் தப்பி ஓடியவர்கள் குறித்து சுங்கத்துறை மற்றும் போலீசாரிடம் தகவல் கொடுத்து அவர்களை தீவிரமாக தேடி வருவதோடு, தொடர்ந்து தப்பியோடியவர்கள் மற்றும் கடத்தலில் தொடர்புடைய நபர்கள் குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் மதிப்பு சுமார் 2 கோடி 20 இலட்சம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் மத்திய சுங்கத்துறை நுண்ணறிவு பிரிவினரால் பறிமுதல் செய்த படகை மண்டபம் சுங்கத் துறை அலுவலகத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

அதிகாலையில் பாம்பன் அருகே கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

- நடராசா லோகதயாளன் -

# இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அடுத்த தலைவருக்கான போட்டி தொடங்கியது

## அடுத்த தலைவருக்கான தெரிவிற்கு எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறிதரன் ஆகியோர் விண்ணப்பித்துள்ளனர்?



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அடுத்த தலைவருக்கான தெரிவிற்கு கட்சி யாப்பிற்கேற்ப எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சி. சிறிதரன் ஆகியோர் சார்பில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

அந்த கட்சியின் மாநாட்டிற்கான திகதி தீர்மானிக்கப்பட்ட நிலையில் தலைவராக தேர்வு செய்ய எண்ணுபவரை கட்சியின் நிரந்தர உறுப்பினர்கள் 6 பேரிற்கு குறையாதோர் ஒப்பமிட்டு முற்கூட்டியே சமர்ப்பிக்க வேண்டும். இதனால் தேர்வாக விரும்புமவர்களின் பெயரை நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்குமாறு சகல தொகுதிக் கிளைகளிற்கும் எழுத்தில் அறிவிக்கப்பட்டது.

இந்த ஏற்பாட்டிற்கு அமைய தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் பெயரை பரிந்துரைத்து 12 உறுப்பினர்கள் ஒப்பமிட்ட விண்ணப்பம் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் ப.சத்தியரிங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதேநேரம் மற்றுமோர் நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறிதரனின் பெயரை பரிந்துரைத்து 6 உறுப்பினர்கள் ஒப்பமிட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரனின் பெயரை வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் த. குருகுலராஜா மற்றும் கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் வேழமாலிதன் உள்ளிட்ட ஆறுபேர முன்மொழிந்துள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் பெயரை கட்சியின் சிரேஸ்ட உப. தலைவர் சி.வி.கே. சிவஞானம், நிர்வாகச் செயலாளர் எஸ்.எக்ஸ். குலநாயகம், மன்னாரைச் சேர்ந்த தி.பரஞ்சோதி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ சிறல், குமாரசாமி, திருகோணமலையைச் சேர்ந்த ஜேம்ஸ் சமத்தர், கொழும்புக் கிளையைச் சேர்ந்த இரட்ணவடிவேல் உட்பட 12 பேர் ஒப்பமிட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் பெயரை முன்மொழிந்துள்ள 12 பேரில் வடக்கு கிழக்கு மாவட்டத்தின் 8 மாவட்டங்களுடன் கொழும்புக் கிளையைச் சேர்ந்த ஒருவரும் ஒப்பமிட்டுள்ளார்.

கட்சியின் மூத்த தலைவராக இருக்கும் சம்பந்தர், மாவை சேனாதிராஜா ஆகியோர் வயது மூப்பு காரணமாக கட்சிப் பணியிலிருந்து விலகக்கூடிய சூழலில், அடுத்த தலைமுறை தலைவர்கள் கட்சியை பொறுப்பேற்று எதிர்காலத்திற்கு வழிநடத்த வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக எழுந்து வருகிறது.

தற்போது தலைவர் பதவிக்கு விண்ணப்பித்த இருவரும் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர்.

# வட மாகாண மீனவர்கள் இலங்கைக்கான ஐ நா வதிவிடப் பிரதிநிதியுடன் சந்திப்பு



இலங்கையில் புதிதாக உருவாக்கப்படும் சட்டத் திருத்ததின் மூலம் மீனவர்களிற்கு நவீன தொழில் நுட்பத்தை புகுத்துவதாக இலங்கை அரசு தெரிவித்தாலும் இது தொடர்பில் மீனவர்களிற்கும் தெரியாது அதற்கான நிதி வழங்குநர்களிற்கும் தெரியாது என வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவ பிரதிநிதிகள் இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதியின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

கொழும்பில் உள்ள ஐ.நா வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்த விடயம் அவரின் கவனத்திற்கு கொண்டு செல்லபட்டுள்ளது.

வடக்கின் 10 மீனவ பிரதிநிதிகள் மற்றும் அகிலன் கதிர்காமர் உள்ளிட்டோர் கலந்துகொண்ட இச்சந்திப்பில், இலங்கையில் தற்போதுள்ள 96 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டத்திற்குப் பதிலாக ஓர் புதிய சட்டம் உருவாக்கப்படவுள்ளது. இது கடல் தொழிலாளரின் இருப்பை பாதிக்கும் விடயமாகவே அமைந்துள்ளது என்று எடுத்துக்கூறப்பட்டது.

இதேபோன்று காலநிலை மாற்றங்களினால் சிறு கடல்தொழிலாளரின் வாழ்வாதாரம் பாதிப்பதனால் - காலநிலை மாற்றம் தொடர்பான ஆய்வுகள் செயல்பாடுகளில் மீனவர்களுடனும் பேச வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

புதிய சட்ட திருத்ததில் மீனவர்களிற்கு நவீன தொழில் நுட்பத்தை புகுத்துவதாக இலங்கை அரசு தெரிவித்தாலும் இந்த விடயம் அதனால் நேரடியாக பாதிக்கப்படக் கூடிய மீனவர்களுக்கோ அல்லது அந்த தொழில்நுட்பத்தை மக்களிடம் எடுத்துச் செல்ல நிதி உதவி செய்பவர்களுக்கோ தெரியாது என்பதும் இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்காரணமாக புதிய சட்டத்தை ஆராய்ந்து அதன் பாதிப்பை இலங்கை அரசிடம் எடுத்துரைக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வடக்கு மாகாண மீனவர்கள் ஐ நா வதிவிடப் பிரதிநிதியிடம் முன் வைத்துள்ளனர்.

இதன்போது புதிய சட்ட வரைபை பெற்றுக்கொண்ட ஐ.நா வதிவிடப் பிரதிநிதி தனியே ஒரு மாகாணத்தின் கோரிக்கை அல்லது பிரச்சனையா இது ஏனைய மாகாண மீனவர்களிற்குமான பிரச்சணையா என்பதனையும் கேட்டறிந்ததோடு ஏனைய மீனவர்களனது கோரிக்கையினையும் இணைக்குமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

வடக்கு மாகாண மீனவர்கள் தமது பிரச்சனைகள் தொடர்பில் ஐ நா உயரதிகாரி ஒருவரை நேரடியாகச் சந்திப்பது இதுவே முதல்முறையாகும்.




# ஈழத் தமிழர்களுக்கு இந்தியாவின் காஷ்மீர் இந்துக்கள் ஆதரவு

ஈழத் தமிழர்களுக்கு இந்தியாவின் காஷ்மீர் பகுதியிலுள்ள இந்து பண்டிட்களின் ஆதரவு தொடரும் என அந்த அமைப்பின் மூத்த தலைவர்கள் உறுதியளித்துள்ளனர்.

இந்தியத் தலைநகர் புதுடில்லிக்குச் சென்றுள்ள ஈழத்தமிழர் குழு ஒன்று பல்தரப்பினரைச் சந்தித்து கலந்துரையாடி வருகின்றனர். அவ்வகையில் காஷ்மீரிலுள்ள இந்து மக்களைப் பிரதானமாகப் பிரதிநிதித்துவபட்டும் பண்டித் மக்களின் மூத்த தலைவர்களான சுஷில் பண்டித் மற்றும் ரவீந்திர பண்டித்தையும் அவர்கள் சந்தித்தனர்.

இந்த கலந்துரையாடலின் பின்னர் தமது ஆதரவு ஈழத் தமிழர்களுக்கு தொடரும் என்று அவ்விருவரும் உறுதியளித்தனர். இந்தச் சந்திப்பிற்கு கருத்து வெளியிட்ட தமிழர் தரப்பு தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கு தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் காஷ்மீரின் முக்கிய பிரமுகர்களான சுஷில் பண்டித், ரவீந்திர பண்டித் ஆகியோருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

அத்தோடு, ஆழமாக ஆராய்ந்து பார்க்கின்றபோது காஷமீர் மக்களும், வடக்கு, கிழக்கு மக்களும் முகங்கொடுக்கும் பிரச்சினைகளும் ஒரேவகையானவையாக இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதேநேரம், இந்தக் கலந்துரையாடலின்போது தமிழர்களையும் அவர்களின் தாயகத்தையும் பாதுகாக்க இந்தியாவிடமிருந்து பாதுகாப்பு மற்றும் நீதிக்கான ஒத்துழைப்புகளை எதிர்பார்ப்பதாக வடக்கு, கிழக்கு அரசியல், சிவில், புலம்பெயர் தரப்பினர் எடுத்துரைத்தனர்.

அத்துடன், தமிழர் தாயகத்தில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் இணைப்பு திட்டங்களை ஊக்குவித்தல், சுயநிர்ணய உரிமை மற்றும் சிவபூமியைப் பாதுகாத்தல், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை இந்தியா முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இவற்றுக்கான முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு காஷ்மீரின் இந்து மக்கள் தயாராகவுள்ளதாகவும், தொடர்ச்சியான இருதரப்பு கலந்துரையடல்களை எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# வங்கக்கடலில் டிச.3ல் புயல் உருவாகிறது: சென்னை, புறநகர் மாவட்டங்களில் கனமழையால் சாலைகளில் வெள்ளம்

இந்திய செய்திகள்

வங்கக்கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு பகுதி டிச.3ம் தேதி புயலாக வலுப்பெறும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்த முதல்வர் ஸ்டாலின், கண்காணிப்பு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு விரைந்து செல்ல உத்தரவிட்டுள்ளார்.அந்தமான் அருகே உருவாகி, வங்கக்கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவுகிறது.

இது இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், 3ம் தேதி வாக்கில் புயலாகவும் வலுப்பெறும். 4ம் தேதி அதிகாலை வடதமிழகம் தெற்கு ஆந்திர கடலோரபகுதிகளில் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.இதன் தாக்கத்தால் தமிழகத்தில் வரும் 4ம் தேதி வரை பரவலாக மழை பெய்யும். கடலோர மாவட்டங்களில் கனமழையும், டெல்டா மாவட்டங்கள், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் மிக கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதற்கிடையே, வங்கக்கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுபகுதி மற்றும் இலங்கை அருகே நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கடந்த 29ம்தேதி காலை முதல் இரவு வரைசென்னை மற்றும் புறநகர் பகுதிகள் உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் கனமழை கொட்டித் தீர்த்தது. சென்னையில் பெய்த கனமழையால் 192 இடங்களில் மழைநீர் தேங்கியது. மேற்கு மாம்பலம், கொளத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வீடுகளுக்குள் மழைநீர் புகுந்ததால் மக்கள் கடும் அவதிக்கு உள்ளாகினர். பல குடியிருப்புகளை வெள்ள நீர் சூழ்ந்தது. ஏராளமான சாலைகளில் மழை நீர் வடியாததால், 29ம் தேதி இரவு முதலே சென்னை மாநகரம் போக்குவரத்து நெரிசலில்



சிக்கித் திணறி வருகிறது.

இந்நிலையில், சென்னை மாநகராட்சி சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ள நிவாரணப் பணிகள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சென்னை ரிப்பன் மாளிகையில் முதல்வர் ஸ்டாலின் நேற்று ஆய்வு செய்தார்.கட்டுப்பாட்டு மையத்தை தொடர்பு கொண்ட மக்களிடம் தொலைபேசி மூலம் உரையாடி அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்தார். பிறகு, முதல்வர் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடந்தது.நிவாரண முகாமில் தங்கவைக்கப்படுவோருக்கு தேவையான உணவு, பாதுகாப்பான குடிநீர் மற்றும் மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும்.

மின்தடை ஏற்பட்டால் உடனுக்குடன் சரிசெய்து, இடையூறு இல்லாமல் மின்விநியோகம் செய்ய வேண்டும். அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். அதிகாரிகளுக்கு உத்தரவு: கண்காணிப்பு பணிகளுக்கென மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள ஐஏஎஸ் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு விரைந்து சென்று மீட்பு, நிவாரண நடவடிக்கைகளை மேற்பார்வையிடுமாறும் அறிவுறுத்தினார்.

121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள், 4,967 நிவாரண முகாம்கள் தயார் நிலையில் இருப்பதையும் உறுதி செய்ய அறிவுறுத்தினார்.

162 இடங்களில் நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு நிவாரண மையமும் பயன்பாட்டில் இல்லை என்கின்ற அளவில் மக்கள் அவரவர்களுடைய வீடுகளிலேயே தங்கி இருக்கிறார்கள். மேற்கு மாம்பலத்தில் பெய்த கன மழையால் சாலையில் தேங்கி நிற்கும் மழைநீர் இன்னும் ஓரிரு மணி நேரத்தில் வடிந்துவிடும். தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இல்லாவிட்டால் சென்னை இந்த அளவுக்கு பாதுகாக்கப்பட்டு இருக்காது. ஒரே நாளில் பெய்த 25 சென்டிமீட்டர் மழை என்பது 2015 டிசம்பரில் வந்த மழையின் அளவு. மழை பாதிப்பு என்பது ஓரிரு இடங்களில் இருக்கத்தான் செய்யும். தமிழக முதல்வர் நேற்று மாலையே மக்கள் பிரதிநிதிகளை குறிப்பாக மாநகராட்சி உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் என அனைவரும் களத்தில் இருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். எல்லா மக்கள் பிரதிநிதிகளும் விடிய விடிய பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்" என்றார்.

இந்த ஆய்வின்போது அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, துணைமேயர் மகேஷ்குமார், ஆ.ராசா எம்.பி., வருவாய் நிர்வாக ஆணையர் எஸ்.கே.பிரபாகர், நகராட்சி நிர்வாகத் துறை செயலர் தா.கார்த்திகேயன், மாநகராட்சி ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், பேரிடர் மேலாண்மை துறை இயக்குநர் எஸ்.ஏ.ராமன் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# சாத்தான்குளம் அருகே நிதி திரட்டி பாசன கால்வாயை சீரமைத்த கிராம மக்கள்!



தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே சடையனேரி கால்வாயை கிராம மக்கள் நிதி திரட்டி சீரமைத்தனர். சாத்தான்குளம் ஒன்றியத்தில் 10க்கும் மேற்பட்ட ஊராட்சி பகுதிகளுக்கு நீர் ஆதாரமாக வைரவம் தருவை, புத்தன் தருவை ஆகிய குளங்கள் விளங்கி வருகின்றன. இந்த குளங்களில் நீர் இருப்பு இருந்தால் இப்பகுதியில் குடிநீர் மற்றும் விவசாய தேவைகள் பூர்த்தியாகும் நிலை உள்ளது. இப்பகுதியில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக போதிய மழை இல்லாததால் இந்த குளங்களுக்கு நீர் வரத்தும் குறைந்து போனது.

இதனால் சடையனேரி கால்வாயில் வரும் தண்ணீரையே கிராம மக்கள் மற்றும் விவசாயிகள் பெரிதும் நம்பியுள்ளனர். இப்பகுதி மக்கள், விவசாயிகள் பயனடையும் வகையில் தாமிரபரணி ஆற்றில் இருந்து சடையனேரி கால்வாயில் தண்ணீர் திறந்து விட வேண்டும் என, விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். எனவே, விரைவில் சடையனேரி கால்வாயில் விரைவில் தண்ணீர் திறக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் உள்ளனர். இதனால் இப்பகுதி மக்கள் தங்கள் பகுதியில் உள்ள சடையனேரி கால்வாயை தாங்களே தூர்வாரி சீரமைத்து வருகின்றனர். சாஸ்தாவிநல்லூர் விவசாய நலச்சங்க நிர்வாகிகள், நங்கைமொழி பகுதியில் இருந்து புத்தன்தருவை பகுதிக்கு திரும்பும் சடையனேரி கால்வாய் நீர்வழிபாதையை கடந்த வாரம் சீரமைத்தனர்.

இதன் தொடர்ச்சியாக சாத்தான்குளம் ஒன்றியம் சாஸ்தாவிநல்லூர் ஊராட்சி பொத்தகாலன் விளை பகுதியில் வரும் சடையனேரி கால்வாயை, கிராம மக்களிடம் நிதி திரட்டி சீரமைக்க சாஸ்தாவிநல்லூர் தொடகக கூட்டுறவு கடன் சங்க முன்னாள் தலைவர் லூர்துமணி தலைமையில் ஊர் நிர்வாகிகள் முடிவு செய்தனர். அதன்படி கிராம மக்கள் அவர்களுக்கு இயன்ற நிதியை அளித்தனர்.இதனை தொடர்ந்து கிராம மக்கள் பங்கேற்புடன் கால்வாயை தூர்வாரி சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. பொத்தகாலன்விளை பகுதியில் தூர்ந்த நிலையில் காணப்பட்ட கால்வாயில் இருந்த செடி, கொடிகள், முட்செடிகள் மற்றும் குப்பைகளை கிராம மக்கள் இணைந்து அகற்றினர். மேலும், பொக்கலைன் இயந்திரம் மூலம் தூர்ந்த பகுதிகளை தூர்வாரி சீரமைத்தனர்.

வைரவம் தருவை குளத்துக்கு செல்லும் பகுதியில் இருந்து முதலூர் புதூர் வரை சுமார் 4 கி.மீ., தொலைவுக்கு கால்வாய் சீரமைக்கப்பட்டது. இதன் மூலம் சடையனேரி கால்வாயில் தண்ணீர் வந்தால் வைரவம் தருவை குளத்துக்கு தண்ணீர் தடங்கலின்றி விரைவாக சென்று நிரம்பும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.இந்த சீரமைப்பு பணியில், இதன் ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவருமான லூர்துமணி தலைமையில் சாஸ்தாவி நல்லூர் விவசாயிகள் நலச்சங்க தலைவர் எட்வின் காமராஜ், வேதகக்கண் அறக்கட்டளை நிறுவனர் ஜோசப் சேவியர், சங்க பொருளாளர் ரூபேஷ் குமார், பெண்கள் ஒருங்கிணைப்பாளர் ரூபி, சங்க செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் ஊர்மக்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து கிராம மக்கள் பங்களிப்புடன் கால்வாயை முழுமையாக சீரமைக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல்நிலையில் பின்னடைவு: மருத்துவர்கள் தீவிர சிகிச்சை



மியாட் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் விஜயகாந்தின் உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. அவருக்கு மருத்துவர்கள் தொடர்ந்து தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.தேமுதிக தலைவர் விஜயகாந்த் உடல்நலக் குறைவால் சில ஆண்டுகளாக கட்சி மற்றும் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்காமல் வீட்டிலேயே ஓய்வில் இருந்து வருகிறார். கடந்த சட்டப்பேரவை தேர்தலிலும் அவர் போட்டியிடவில்லை. அவர் தனது குடும்பத்தினருடன் இருக்கும் புகைப்படங்கள் அவ்வப்போது சமூக வலைதளத்தில் பதிவிடப்படுகின்றன.


இதற்கிடையே, அவருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதால், அவ்வப்போது மருத்துவமனைக்கு சென்று பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறார். கடந்த ஆண்டு ஜூலை மாதம் அவருக்கு இருந்த நீரிழிவு பிரச்சினையால், வலது காலில் உள்ள விரல் பகுதியில் ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு, அந்த விரல் அகற்றப்பட்டது.இந்த நிலையில், வீட்டில் ஓய்வில் இருந்த விஜயகாந்துக்கு பருவமழையால் இருமல், காய்ச்சல், சளி தொந்தரவுகள் ஏற்பட்டன. இதையடுத்து, சென்னை மியாட் மருத்துவமனையில் கடந்த 18ம் தேதி அனுமதிக்கப்பட்டார்.அங்கு தீவிர சிகிச்சை பிரிவில் (ஐசியு) இருக்கும் அவருக்கு சில நேரங்களில் தானாக சுவாசிப்பதில் சிரமம் இருப்பதால், செயற்கை சுவாசம் அளிக்கப்படுகிறது.

அவரை மருத்துவர்கள் தொடர்ந்து கண்காணித்து, உரிய சிகிச்சைகளை அளித்து வந்த நிலையில், அவரது உடல்நிலையில் சற்று பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, நுரையீரல் உள்ளிட்ட துறைகளின் மருத்துவர்கள் அவருக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.விஜயகாந்த் உடல்நிலை குறித்து மியாட் மருத்துவமனை நிர்வாக இயக்குநர் பிரித்வி மோகன்தாஸ் வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'விஜயகாந்த் உடல்நலத்தில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. எனினும், கடந்த 24 மணி நேரத்தில் அவரது உடல்நிலை சீரான நிலையில் இல்லாததால், அவருக்கு நுரையீரல் சிகிச்சைக்கான உதவி தேவைப்படுகிறது. அவர் விரைவில் பூரண உடல்நலம் பெறுவார் என்று நம்புகிறோம். அவருக்கு இன்னும் 14 நாட்கள் மருத்துவமனையில் தொடர் சிகிச்சை தேவைப்படுகிறது' என்று தெரிவித்துள்ளார்.

பிரேமலதா வீடியோ பதிவு: இதற்கிடையே, தேமுதிக பொருளாளர் பிரேமலதா நேற்று இரவு வெளியிட்ட வீடியோவில், விஜயகாந்த் உடல் நலம் குறித்து மருத்துவமனை தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கை ஓர் வழக்கமான ஒன்று தான். அதைப் பார்த்து பயப்படவோ,பதற்றப்படவோ தேவையில்லை. விரைவில் அவர் பூரண உடல்நலம் பெற்று வீடு திரும்புவார். எனவே, யாரும் எவ்வித வதந்திகளையும் நம்ப வேண்டாம் என தெரிவித்துள்ளார்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1076

## அனலைதீவு அரிஉறரபுத்திரஐயனார் ஆலயம் அனலைதீவு, யாழ்ப்பாணம்

அண்மையில் இறைவனடி சேர்ந்த எனது அன்புக்கணவர் திரு. நடராசன் அவர்கள், அனலைதீவை பிறப்பிடமானவர். அனலைதீவு அரிஉறரபுத்திர ஐயனார்மீது ஆராத பக்தி கொண்டவர். 20 வருடங்களுக்கு மேலாக, ஈழத்துத் திருக்கோயில்கள் தொடரை எழுதுவதற்கு அருந்துணை புரிந்தவர். அனலைதீவு அரிஉறரபுத்திரஐயனார் ஆலயத் தொடரை, எனது அன்புக்கணவருக்கு, ஆத்மசமர்ப்பணாகச் சமர்ப்பிக்கின்றேன். அவரது ஆத்மா சாந்தி அடையட்டும். ஓம் சாந்தி.

"பூரணைக் கிறைவர போற்றி
புட்கலை கணவா போற்றி
வாரணம் ஏறி எங்கள்
வருந்துயர் களைவாய் போற்றி
ஆரணச் சுருதி எல்லாம்
ஆடல் உருத்திர அண்ணலென்று
காரணங் கருதி ஏத்தும்
கடவுளே போற்றி போற்றி"

ஐயனாரின் அருட்கருணையை பல வழிகளில் எடுத்தியம்பியுள்ளனர். ஒரு சந்தர்ப்பத்தில், சுந்தரர், இறைவனை வணங்கத் திருக்கைலாயம் சென்றார். சேரமான்பெருமாளும் இவரைத் தொடர்ந்து சென்று, தாம் இயற்றி அருளிய திருக்கைலாய ஞானஉலாவைப் பாடி வணங்கினார். இதனைக் கேட்ட ஐயனார் அவ்வுலாவைத் தென்னாட்டிலுள்ள திருப்பிடவூருக்குக் கொண்டு வந்து, தமிழக மக்கள் அறியச்செய்யுமாறு அருள்புரிந்தார். இவ்வூரிலுள்ள ஐயனார் கையில் திருக்கைலாய ஞானஉலா காணப்படுவதால் இவரை அரங்கேற்றிய ஐயனார் என்றழைப்பர். ஐயனாரோடு தொடர்புடைய இச்சம்பவம் பெரியபுராணத்திலே காணப்படுகின்றது. கிபி 16ஆம் நூற்றாண்டில் நரசிம்மபூபாலன் என்ற சோழமன்னனின் அவைக்களப் புலவர்களாக அப்பைய்யதீட்சிதர் என்பவரும், இன்னொரு புலவரும் இருந்துள்ளனர். ஒருநாள் இரு புலவர்களுடன் மன்னன் அண்மையிலுள்ள ஐயனார் கோவிலுக்குச் சென்ற போது, அங்குள்ள ஐயனார் திருவுருவம் மூக்கிலே கை வைத்தபடி காணப்பட்டது. இதுபற்றி அருகிலுள்ளவர்களிடம் மன்னன் விசாரித்தபோது, "இங்கு ஒரு ஞானி வருவார். அவர் அரசனுடைய வேண்டுகோளின்படி, ஐயனார் மூக்கிலே விரலை வைத்தவாறு இருப்பதற்குரிய காரணத்தைக் கூறுவார். உண்மைக் காரணத்தைக்கேட்டவுடன் ஐயனார் மூக்கிலிருந்து விரலை எடுத்துவிடுவார்" என்று எங்கள் மூதாதையர் கூறியுள்ளனர் என உரைத்தனர்.

அவ்வாறே அரசனும் அருகில் நின்ற புலவரைப் பார்த்துக் காரணங் கூறுமாறு கேட்டபோது, அவர் கூறிய காரணத்தைக் கேட்டு ஐயனார் மூக்கிலிருந்து விரலை எடுக்கவில்லை. பின்னர் அரசனுடைய வேண்டுகோளின்படி அப்பய்யதீட்சிதர், பின்வரும் பொருளுடைந்த பாடலைப் பாடினார். "நான் பார்வதியையும், திருமாலையும் அம்மா என அழைப்பேன். சிவனைத் தந்தை என்று அழைப்பேன். திருமகளை எவ்வாறு அழைப்பதென்பது புரியவில்லையே என ஐயனார் சிந்தனை செய்கின்றார்" என்ற பாடலைப் பாடியதும், ஐயனார் மூக்கிலிருந்து விரலை எடுத்து விட்டார் என்பர். இவ்வாறு ஐயனர் புலவர்களோடு உறவாடியமை, தீட்சிதேந்திர நூலிலே கூறப்பட்டுள்ளது. பொதுவாகக் கிராமங்களிலே மழை இல்லாத காலத்திலும், பஞ்சம், பட்டினி ஏற்படுங் காலத்திலும், கால்நடைகளுக்குக் கோமாரி போன்ற நோய்கள் வரும் வேளையிலும், ஊர்மக்கள் சின்னம்மை, பெரியம்மை, வாந்திபேதி போன்ற தொற்று நோய்களால் தாக்கப்படும் வேளையிலும் ஐயனாரை வேண்டி வழிபடுவதும், நேர்த்தி செய்வதும், வழக்கமாகக் காணப்படுகின்றது.

அனலையம்பதியில் உறைகின்ற அரிஉறரபுத்திர ஐயனார் செய்த அற்புதங்களோ எண்ணற்றவை. இங்கு பூசைசெய்த பின் பூசகர் சென்றபின், அர்த்த யாமத்திலும் மணியடித்துத் தேவபூசை நடைபெறுவதாக, இவற்றை அநுபவபூர்வமாகக் கேட்டுணர்ந்த அன்பர்கள் கூறுகின்றனர். மழை இல்லாது வரட்சியின் கொடுமையால் பயிர்களும், கால்நடைகளும், மக்களும் துன்பமுறும்வேளையில், ஐயனாரிடம் மழைவேண்டி வழிபாடு செய்து வீடு திரும்புமுன், மழைபெய்வதாகவும் இங்குள்ள மக்கள் கூறுவர். அனலைதீவின் பொருளாதாரம், கமத்தொழிலில் பெரிதும் தங்கியுள்ளதால் கால்நடைகளைப் பெரிதும் போற்றிப் பேணுவது கண்கூடு. இவற்றிற்கு நோய் வரும்பொழுது ஐயனாரை நினைத்து, அவற்றின் கழுத்திலே காசு கட்டி நேர்த்தி செய்து, நிவர்த்தி பெறுவர். ஐயனாரின் கருணைக்கு எடுத்துக்காட்டாக, ஏறக்குறைய 300 வருடங்களுக்கு முன் நடைபெற்ற சம்பவத்தைப் புலவர்களும் தமது பாடல்களிலே குறிப்பிட்டுள்ளனர். ஊழிக்காலக் காற்றும், பெருமழையும் பெய்து பேரலைகள் பொங்கியெழுந்து, ஊரே அழிந்து விடுமோ என்ற நிலை காணப்பட்டது. அப்பொழுது ஊர்மக்கள் ஐயனாரின் ஆலயத்துள் சென்று காப்பாற்றும்படி வேண்டினார்கள். அப்பொழுது நாற்திசையிலும் இடிமுழக்கம் போன்ற சத்தம் ஏற்பட்டு, பொங்கி வந்த கடல் வற்றிக்காணப்பட்டது. மக்களும் ஐயனாரின் கருணையைப்போற்றி வணங்கிச் சென்றனர். இச்சம்பவத்தை வரகவி முத்துக்குமாரப்புலவர்

"வடமலைகள் கிடுகிடென மறுமலைகள் சாய
மழையினுடன் பிரசண்ட மாருத மடிக்க
கடல்குமுறி அலைபொருதிக் கலகலவென வரவே
காராளர் கண்டு நின்றபயமுறை யிடவே
திடுதிடென யானைமீ தையனார் தோன்றித்
திக்கெட்டு மேபடைக ளேவியே நின்று
விடுவிடென வெடிவைக்க அஞ்சியே கடலும்
விசைகெட்டு அலைகெட்டு ஓய்ந்திட்ட தன்றே"

என மிக அழகாகப் பாடியுள்ளார்.

அருவஉருவமாய் காலத்திற்கும் குணத்திற்கும் அப்பாற்பட்ட பரம்பொருளின் நியதியின்படி, காரிய காரணங்களுக்காக, அரிகரஐயனார் ஐக்கியம் ஏற்பட்டதென்பர். ஈழத்தில் ஐயனார் வழிபாட்டை மேற்கொண்ட தமிழ்மக்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் ஐயப்ப வழிபாட்டை மேற்கொண்டு வருகின்றனர். அரிஉறரபுத்திர ஐயனாரின் திரு அவதாரமே சபரிமலை ஸ்ரீ ஐயப்பன். அவதாரம் என்பது கீழிறங்கி வருதல் என்ற கருத்தையுடையது. அதாவது தெய்வம் என்ற உயர் நிலையிலிருந்து பக்தர்களைக் காத்தருள்வதற்காக மானிட வடிவந் தாங்கி வருதலையே அவதாரம் என்பர். பக்தர்களைக் காக்க நான் யுகங்கள் தோறும் அவதரிக்கின்றேன் என்று கிருஷ்ணபரமாத்மா கூறியுள்ளார். உலகெங்கும் அவதாரபுருஷர்கள் காலத்திற்குக்காலம் தோன்றிக்கொண்டே இருக்கின்றார்கள். இவ்வாறு மக்களைக் காத்தருள, ஐயனார் மனிதவடிவில் ஐயப்பனாக அவதாரம் எடுத்து, சபரிமலையிலுள்ள ஸ்ரீ சாஸ்தாவிக்கிரகத்தில் ஐக்கியமாகிவிட்டவர். ஐயப்பன் கடும் பிரமச்சரியம் மேற்கொண்டவர். ஐயனாரை வழிபடுவோர், ஐயப்ப வழிபாட்டையும், சபரிமலைக்குச் செல்லும் வழக்கத்தையும் புலம்பெயர்ந்த நாடுகளில் பெரிதும் பேணிப் போற்றி வருகின்றனர்.

ஓதக் கடல்சூழ் அனலைப் பதியி லுறையுமருட்
போதக் கடலைப் புரிகுழற் பூரணை புட்கலைக்கு
நாதக் கடவுளை நாங்கள் பணிய நமைப்பணிந்து
காதக் கடல்கடந் தோடிய தீவினைக் கட்டுக்களே

என்று நவாலியூர் சோமசுந்தரப்புலவர், அனலைப்பதியுறை அரிஉறரபுத்திர ஐயனாரைப் போற்றியதற்கிணங்க, ஐயனார் பாதம் பணிவோரை, தோன்றாத் துணையாகிக் காப்பாற்றுவார். முன்வினைப்பயனாக இவர்து அடியவர்கள் துன்பத்தை அனுபவிக்க நேர்ந்தபோதிலும், ஐயனாரே யாவும் என்றெண்ணிச் சரணாகதி அடைந்தோரின், விதியையும் மாற்றி அருள்புரிந்து, துன்பத்தை நீக்கிச் சகல வளங்களையும், வசதிகளையும் அள்ளிக்கொடுத்துக் கருணைத் தெய்வமாக விளங்குவதை, ஐயனாரின் பக்தர்கள் அனுபவவாயிலாக அறிந்துள்ளனர்.

காலலத்திற்குக் காலம் அனலைதீவம், அரிஉறரபுத்திர ஐயனார் ஆலயமும், பல்வேறு நிலையில் மாற்றங்களைக் கண்டுள்ளது. ஆலயப்பணிகள் பல அன்பர்களின் உதவியுடன் திருப்பணிகள் பல செய்யப்பட்டு அருளும் பொலிவு கொண்ட ஆலயமாக விளங்குகின்றது.

"சிந்து வாரணம் வாழி சேவல் வாழி
திறன் மகாகாளர் முதற் சேனை வாழி
சந்நுதற் பூரணைபுட்கலையும் வாழி
சதுர்வேத ஆச்சிரம தருமம் வாழி
மந்திர வேதியர் வாழி மகங்கள் வாழி
வான்மகளிர் கற்புநெறி மநுநூல் வாழி
எந்தையரி ஹரகுமர னடியார் வாழி
எழிலனலப் பதியென்றும் வாழி வாழி."

- தொடரும்...

## கடந்தவையும் கடப்பவையும் - (78)

திருமண அழைப்பு என்றதுமே - அங்கு
அதுவரை இருந்த கலகலப்பு குறைய

நெஞ்சமும் ஒருவிதத்தில் கனமாக - மன
சஞ்சலத்தால் ஒரு கணிப்பு - அன்று

சின்னதாய் ஒருசாட்டு வந்துவிட்டால் போதும்
என்னவாய் ஆர்வம் அங்கு வர

எதிர்த்து வீசும் வல்லைவெளிக் காற்றோடு
சரிக்குச் சமமாகப் போட்டி போட்டு

வேர்க்க விறுவிறுக்க துணைக்கு வந்தவர்க்கு
பால்த்தேநீரும் பருப்பு வடையும் - இருதடவை

வாங்கிக் கொடுத்தவர்கள் இப்போதெல்லாம்
விம்புக்கு நிக்கிறார்கள் அழைப்பு வந்தும் - நாளை

ஒருதடவை போவதற்கு மட்டுமே இருபத்தையாயிரம்
பெருந்தடைக் காலத்துப் போக்குவரத்து - எரிபொருள்

வரிசையே சொல்லும் நாங்கள் போனகாலம்
பெரிதளவுச் செலவுக் காலம் என்று - ஆனாலும்

மறுப்பதற்கு முடியாத உருத்துடையார் அழைப்பு
சறுக்கலாக சாட்டேதும் சொல்லவே முடியாது

'செல்வச்சந்நிதியில் தாலிகட்டாம் என்பதோடு
வெள்ளனவே வரவேண்டும் என்பதாகச் சொல்கிறார்கள்' என்றதுதான்

எல்லோரும் எழும்பினார்கள் வீட்டுக்கல்ல
நல்லது என்று எல்லோரும் தேர்ந்தெடுத்த நியோவிற்கு

உள்ளே பள்ளியறைப் பூசை போலும்
நல்லாகத்தான் கேட்கிறது ஊஞ்சற்பாட்டு

மெள்ளமாய் ஆலயத்தின் உள்ளேபோக விருப்பமுண்டு - சிறு
மஞ்சத்தில் தள்ளிச்சென்று பள்ளியறையில் முருகப்பெருமானை - துயில்

கொள்ளச் செய்து அதிகாலை நல்லூர் - திருப்
பள்ளி எழுச்சி பாடி விரைவாக கொண்டுவந்து

வைப்பதுண்டு மூலவரை என்பதுவும் - இந்த
நல்லூருக்குரிய சிறப்பிலொன்று - இதை

பலநாட்கள் பார்த்த ஆர்வம் - அதனால்த்தான்
மனதோரம் சிறிதாக ஓர் அங்கலாய்ப்பு - ஆனாலும்

அதையெல்லாம் அடக்கிக்கொண்டு போகத்தான் முடிந்தது
பாதையிலே பல கடைகளையும் மக்களது உடைகளையும் பார்த்தபடி

( தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

கனடிய செய்திகள் Canadian News

# மானிப்பாய் இந்துக்கல்லூரி மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர்சங்கம் – கனடா விடு முறை ககொண்டாட்ட விழா 2023




எமது கனடா பழைய மாணவர் சங்கத்தினால் வருடம் தோறும் கோலாகலமாக கொண்டாடப்படும் விடுமுறை கால கொண்டாட்ட விழா எதிர் வரும் December மாதம் 09ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6:00 மணிக்கு, இலக்கம் 430 Nugget Avenue, Scarborough வில் அமைந்துள்ள The Estate Banquet & Event Centre Hall ல் (Markham and Nugget Intersection) ஆரம்பமாகும் என்பதனை உங்கள் அனைவருக்கும் தெரிவிக்கின்றோம்.

இவ்விழாவில் உங்கள் அனைவரது இரசனைக்கும் விருந்தாக திரை இசைப்பாடல்கள், நடன நிகழ்ச்சிகள், வேடிக்கை விளையாட்டு அம்சங்கள், அதிஷ்ட பரிசுகள் அத்துடன் SANTA (நத்தார் பாப்பா)வின் வருமுகயும் உண்டு.

இதன் போது சிறார்கள், பெரியவர்கள், முதியவர்கள் என்ற பேதமின்றி அனைவரையும் மகிழ்விக்க கண்கவர் நிகழ்ச்சி ஒழுங்குகளையும், அறுசுவை உணவு ஏற்பாடுகளையும் மற்றும் இன்னோரன்ன போழுது போக்கு அம்சங்களையும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

ஆகதவ இவ்விழாவிற்கு ஆதரவாக பழைய மாணவர்கள், மாணவிகள் அவர் தம் வாழ்க்கைத்துணைவர்கள், பிள்ளைகள், நலன் விரும்பிகள் மற்றும் நண்பர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு எமது சங்கம் சார்பில் அன்புடன் அழைக்கின்றோம்.

நடைபெறவிருக்கும் இவ்வினிய மாலைப்பொழுதில் கல்லூரி நினைவுகளை மீண்டும் ஒரு முறை மீட்டிப்பார்ப்பதற்கு மானி இந்து மானி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்க நிர்வாகக்குழு மிகவும் ஆவலுடன் காத்திருக்கின்றது.

தொடர்புகட்கு:
திரு. க. கமல்ராஜ் (416-821-7870)
திரு. சி. கணேசலிங்கம் (416-499-6248)
திரு. க. சூரியமூர்த்தி (416-616-1787







# கனடாவில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பாராளுமன்றமானது டிசம்பர் 01ஆம் திகதி முதல் 03ஆம் திகதி வரை கூடுகிறது

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மூன்றாவது பாராளுமன்றத்தின் பத்தாவது நேரடியமர்வானது டிசம்பர் மாதம் 01ஆம் திகதி முதல் 03ஆம் திகதி வரை கனடாவில் மார்க்கம் நகரத்தில் நடைபெறவுள்ளது.

முதல் நாள் அமர்வு டிசம்பர் 01ஆம் திகதி "அமைதிக்கும் பாதுகாப்புக்குமான புதிய பொறிமுறை என்ற கருப்பொருளில்" 9350 Markham Rd இல் அமைந்துள்ள Markham Museum என்ற இடத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

இந்த அமர்வில் Mr. Robert Avetisyan, Permanent Representative of the Nagorno-Karabakh Republic (NKR) to the United States, மற்றும் Ashok Arora is one of the seven co-founders of Infosys. He served as the Member of the Board of Infosys from 1986 – 1989. He is now based in the United States.

ஆகியோர் முக்கிய பேச்சாளர்களாக கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

2ஆம் 3ஆம் நாள் அமர்வு 900 York mills road இல் உள்ள Pan Pacific Toronto என்ற இடத்தில்நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் வாழும் அனைத்து நாடுகளிலிருந்தும் ஆர்வமுள்ளவவர்கள் அனைவரையும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அங்கத்தவர்கள் அன்புடன் அழைக்கின்றார்கள்.

தொடர்புகளுக்கு: (416) 830-4305
நேரடியாகப் பார்க்க: http://www.tgte.tv/ என்னும் இணைப்பிற்குச் செல்லவும்.

# அன்பின் தொனி - 714

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**தேவகிருபை** - Grace of God

**தேவவார்த்தை ஜீவவார்த்தை**

அலேலூயா, என் ஆத்துமாவே, கர்த்தரைத் துதி. நான் உயிரோடிருக்குமட்டும் கர்த்தரைத் துதிப்பேன், நான் உள்ளளவும் என் தேவனைக் கீர்த்தம்பண்ணுவேன். பிரபுக்களையும், இரட்சிக்கத்திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள். அவனுடைய ஆவிபிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான், அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம். யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான். அவர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கினவர், அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர். அவர் ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ் செய்கிறார், பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங் கொடுக்கிறார், கட்டுண்டவர்களைக் கர்த்தர் விடுதலையாக் குகிறார். குருடரின் கண்களைக் கர்த்தர் திறக்கிறார், மடங்கடிக்கப் பட்டவர்களைக் கர்த்தர் தூக்கி விடுகிறார், நீதிமான் களைக் கர்த்தர் சிநேகிக்கிறார். பரதேசிகளைக் கர்த்தர் காப்பாற்றுகிறார், அவர் திக்கற்றபிள்ளையையும் விதவையையும் ஆதரிக்கிறார், துன்மார்க்கரின் வழியையோ கவிழ்த்துப்போடுகிறார். கர்த்தர் சதாகாலங்களிலும் அரசாளுகிறார், சீயோனே, உன் தேவன் தலைமுறை தலைமுறையாகவும் ராஜரிகம்பண்ணுகிறார். அல்லேலூயா.
**- சங்கீதம் 146: 1-10**

கர்த்தரைத் துதியுங்கள், நம்முடைய தேவனைக் கீர்த்தனம் பண்ணுகிறது நல்லது, துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது. கர்த்தர் எருசலேமைக் கட்டுகிறார், துரத்துண்ட இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்க்கிறார். இருதயம் நொறுங்குண்ட வர்களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார். அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி, அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார். நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார், அவருடைய அறிவு அளவில்லாதது. கர்த்தர் சாந்த குணமுள்ளவர்களை உயர்த்துகிறார், துன்மார்க்கரைத் தரைமட்டும் தாழ்த்துகிறார். கர்த்தரைத் துதியுடன் பாடிக் கொண்டாடுங்கள், நம்முடைய தேவனைச் சுரமண்டலத்தால் கீர்த்தனம் பண்ணுங்கள். அவர் வானத்தை மேகங்களால் மூடி, பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்தி, மலைகளில் புல்லைமுளைப் பிக்கிறார். அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிறகாக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார். அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார், வீரனுடையகால்களில் பிரியப்படார். தமக்குப் பயந்து, தமதுகிருபைக்குக் காத்திருக்கிறவர் கள் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். எருசலேமே, கர்த்தரை ஸ்தோத்திரி, சீயோனே, உன் தேவனைத் துதி. அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி, உன்னிடத்திலுள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார். அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உசிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார். அவர் தமது வார்த்தையைப் பூமியிலே அனுப்புகிறார், அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது. பஞ்சைப் போல் உறைந்தமழையைத் தருகிறார், சாம்பலைப் போல உறைந்த பனியைத் தூவுகிறார். அவர் தமது கல் மழையைத் துணிக்கைகளாக அனுப்புகிறார், அவருடைய குளிருக்கு முன்பாகநிற்பவன் யார்? அவர் தமது வார்த்தையை அனுப்பி, அவைகளை உருகப் பண்ணுகிறார், தமது காற்றை வீசம்படி செய்ய, தண்ணீர்கள் ஓடும். யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரவேலுக்குத் தமது பிரமாணங்களையும் தமது நியாயங்களையும் அறிவிக்கிறார். அவர் வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை, அவருடைய நியாயங்களை அறியாமற்போகிறார்கள். அல்லேலூயா. **- சங்கீதம் 147: 1-20**

அல்லேலூயா, வானங்களில் உள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள், உன்னதங்களில் அவரைத் துதியுங்கள். அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள், அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள். சூரிய சந்திரரே, அவரைத் துதியுங்கள், பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே, அவரைத் துதியுங்கள். வுானாதி வானங்களே, அவரைத் துதியுங்கள், ஆகாய மண்டலத்தின் மேலுள்ள தண்ணீர்களே, அவரைத் துதியுங்கள். ஆவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது, அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் அவைகளை என்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நிலைக்கும்படி செய்தார், மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார். பூமியிலுள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள், மகாமச்சங்களே, சகல ஆழங்களே, அக்கினியே, கல்மழையே, உறைந்த மழையே, மூடுபனியே, அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே, மலைகளே, சகலமேடுகளே, கனிமரங்களே, சகல கேதுருக்களே, காட்டுமிருகங்களே, சகல நாட்டு மிருகங்களே, ஊரும் பிராணிகளே, இறகுள்ள பறவைகளே, பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே, பிரபுக்களே, பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளே, வாலிபரே, கன்னிகைகளே, முதிர் வயதுள்ளவர்களே, பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள். அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள், அவருடையநாமம் மாத்திரம் உயர்ந்தது, அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது. அவர் தம்முடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும்,தம்மைச் சேர்ந்த ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் கொண்டாட்டமாக, தம்முடைய ஜனத்திற்கு ஒரு கொம்பை உயர்த்தினார். அல்லேலூயா. **- சங்கீதம் 148: 1-14**

**தொடரும்...**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாண நீதிமன்றங்களின் வரலாற்றில் ஒரு எழுச்சி!

## சித்தங்கேணி இளைஞன் அலெக்ஸின் நலன்களை கவனிப்பதற்காக 50க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் ஆஜர்! நீதிவான் வழங்கிய சில கட்டளைகளின் முடிவிலே ஐவரை கைது செய்யுமாறு உத்தரவு!

பு. கஜிந்தன்

சித்தங்கேணி இளைஞன் அலெக்ஸின் மரணம் குறித்து இதுவரை நடைபெற்ற மரண விசாரணை நடவடிக்கைகளின் முடிவிலே யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் சில கட்டளைகளை வழங்கியுள்ளார். அந்த வகையில் ஐவரை கைது செய்யுமாறு உத்தரவிட்டார்.

இறந்தவரின் நலன்களை கவனிப்பதற்காக 50க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் ஆஜராகி இருந்தனர். சட்டத்தரணிகளின் விண்ணப்பத்தின் பேரிலே அதாவது இன்றையதினம் சாட்சியமளித்த ஐந்து சாட்சிகளிலே மூன்றாவது சாட்சியாக சாட்சியமளித்த நபர் இறந்தவர்களுடன் சமகாலத்தில் தானும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு தாக்குதலுக்கும் உள்ளாக்கப்பட்டதாக கூறியிருப்பதன் அடிப்படையிலேயே அவரின் சாட்சியங்களின் அடிப்படையில் அவரால் கூறப்பட்ட இரண்டு பொலிஸ் அலுவலர்களை கைது செய்து நீதிமன்றம் முன்னாலே முன்னிலைப்படுத்துமாறு யாழ்ப்பாண பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு மாண்புமிகு நீதிமன்றம் கட்டளையிட்டது.

மேலும் இந்த சாட்சி தனது வாக்குமூலத்திலே தான் பொலிஸ் நிலையத்திற்கு வெளியிலே சில இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில் அந்த இடங்களுக்கு அவரை அழைத்துச் சென்று அந்த இடங்களை அடையாளம் காட்டுவதற்கும், விஞ்ஞானபூர்வமான பரிசோதனைகளுக்கு உட்படுத்துவதற்குமாக கட்டளை ஒன்றை ஆக்குமாறு பொலிஸ் தரப்பில் ஆஜராகியிருந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் இளங்கக்கோன் விண்ணப்பம் செய்ததன் பேரிலே அதற்கான கட்டளையும் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நபர் இவ்விதம் அனைத்து செல்லப்படுகின்ற பொழுது அவருடைய நலன்களை உத்திரவாதப்படுத்துவதற்கு சட்டத்தரணிகளால் பெயர் குறிப்பிடப்பட்ட இரண்டு சட்டத்தரணிகள் அவருடன் கூடச் செல்வதற்கு மாண்புமிகு நீதிமன்ற அனுமதி வழங்கி உள்ளது.

இதைவிட குறித்த சாட்சியினாலே அங்க அடையாளங்கள் விவரமாக குறிப்பிடப்பட்ட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களின் விவரங்களை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் நீதிமன்ற கட்டளை வழங்கியுள்ளது.

இதைவிட மன்றுக்கு வந்து சாட்சியமளித்த சட்ட வைத்திய அதிகாரி அவர்கள் தன்னுடைய சாட்சியத்திலே இறந்தவருடைய உடலில் காணப்பட்ட காயங்களை விவரித்ததோடு அந்த காயங்கள் தொடர்பான தன்னுடைய அபிப்பிராயத்தையும், காயங்கள் மூலமாகத்தான் மரணம் ஏற்பட்டுள்ளது என்பதனையும், மரணம் ஏற்படுவதற்கு அவருடைய சிறுநீரகம் பாதிக்கப்பட்டது தான் பிரதான காரணமாகவும் இருந்தது கூறி இருக்கின்றார்.



இது ஒரு உயர் மனித உயிர் போக்கல் அல்லது மனித ஆட்கொலை என்ற அபிப்பிராயத்தை கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்றும் நீதிமன்று சுட்டி காட்டி இருக்கிறது.

மேலும் இந்த இரண்டு பொலிஸ் அலுவலர்களும், கடந்த காலங்களிலே சில வழக்குகளிலே நிகழ்ந்ததைப் போல ஒருவேளை மரண விசாரணை நடவடிக்கைகளின் பின்னணியிலே நாட்டை விட்டு செல்ல கூடும் என்ற அச்சத்தினை சட்டத்தரணிகள் வெளிப்படுத்தி அவர்களுக்கு பிரயாணத் தடை வழங்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அவர்கள் நாட்டை விட்டு தப்பிச் செல்லாத விதத்திலே பிரயாண தடையினை பொலிஸ் துறை நடைமுறைப்படுத்த முடியும் என்று மாண்புமிகு நீதிமன்றம் கூறியது. அதற்கான மேலதிக நடவடிக்கை எடுப்பதாகவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உத்தரவாதத்தினை வழங்கியுள்ளார்.

மேலும் தாங்கள் மேற்கொண்டுள்ள உள்ளக விசாரணைகளின் அடிப்படையிலே நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடையாளம் காணப்பட்டு இருக்கின்றார்கள் என்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் குறிப்பிட்டு இருக்கிறார்.

இன்றைய சாட்சியத்திலே மேலும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரின் அங்க அடையாளங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. நடவடிக்கையிலேயே யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா நீதிமன்றங்களில் கடமையாற்றும் எல்லாமாக 50க்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் இந்த வழக்கில் கலந்து கொண்டு தங்களது சமூக கடமையை ஆற்றி இருக்கின்றார்கள்.

மரணவிசாரணை சட்டத்தரணிகளின் விண்ணப்பத்தின் பேரிலே தொடர்ந்து விரைவாக இடம்பெறுவதற்கு ஏதுவாக எதிர்வரும் திங்கள்கிழமை பிற்பகலுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.



# உலகில் தமிழர்கள் இருக்கும் வரை மாவீரர்களின் தியாகம் போற்றப்படும் என்கிறார் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் விஜயகுமார்

உலகில் ஒற்றைத் தமிழன் இருக்கும் வரை மாவீரர்களின் தியாகம் போற்றப்படும் என யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவித்தார்.

திங்கட்கிழமை மாவீரர் தின இறுதிநாள் தொடர்பில் இந்திய மின் இதழ் ஒன்றிற்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நவம்பர் 27 மாவீரர் நாள். சிங்கள தேசத்தின் ஆக்கிரமிப்பில் இருந்து தமிழர்கள் விடுதலை பெற்று தமிழர்களுக்கு என்று ஒரு தேசம் கிடைக்க வேண்டும் என்பதற்காக தங்கள் இன்னுயிர்களை ஆகுதியாக்கிய ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மாவீரர்களை நினைவு கூருவதற்காக தாயகம், தமிழகம் உள்ளிட்ட உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளிலும் பரந்து வாழும் தமிழர்கள் உணர்வழிச்சியுடன் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழர் தாயகத்தில் சிறீலங்கா பேரினவாத அரசு எப்படியாவது மாவீரர் நாளை திட்டமிட்டு முடக்க வேண்டும் என்பதற்காக மாவீரர் நாள் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களை அச்சுறுத்துவதில் தனது இனவழிபு காவல்துறையை தீவிரமாக களமிறக்கியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை குறித்து எமது செய்திப் பிரிவுக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் விஜயகுமார் கருத்து தெரிவிக்கையில்.

ஐ.நாவில் இலங்கை குறித்து 2015 இல் கொண்டுவரப்பட்ட 30/1 தீர்மானத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டு தீர்மானத்தை தாம் முழுமையாக நடைமுறைப் படுத்துவதாக ஐ.நா மனித உரிமை ஆணையத்திடம் ஒப்புதல் வழங்கியிருந்தது.

இந்தத் தீர்மானத்தின் பிரகாரம் நிலைமாறுகால நீதியின் வழியே இழப்பீட்டு உரிமை என்பதற்குள் நினைவேந்தல் உரிமையை ஏற்றுக் கொள்வதாக இலங்கை அரசு ஒப்புக்கொண்டது.

அவ்வாறு இருக்கும்போது தற்போது தமிழ் மக்களின் மாவீரர் நாள் நினைவேந்தல் உரிமையை சிறீலங்கா அரசு நீதிமன்றங்களின் ஊடாகவும் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் மாவீரர் நாள் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதானது சிறீலங்கா அரசு தானே ஒப்புக்கொண்ட ஐ.நா தீர்மானத்தை மீறும் செயலாகும்.

அரசின் இத்தகைய நடவடிக்கையானது அரசு கூறும் நல்லிணக்கத்தை எப்படி புரிந்து கொள்வது என்று மாணவர்களாகிய நாங்களே குழப்பத்தில் இருக்கின்றோம்.

இலங்கை அரசின் இந்த நடவடிக்கை தமிழர்களை மட்டுமல்ல ஐ.நா உள்ளிட்ட பன்னாட்டு சமூகத்தையும் ஏமாற்றும் செயலாகும்.

எம்மைப் பொறுத்தவரை இறந்தவர்களை இறைவனுக்கு நிகராக வழிபடும் மரபு வழியில் வந்தவர்கள் நாங்கள் அந்த வகையில் எமது உரிமைகளுக்காக தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த ஒவ்வொரு மாவீரர்களையும் உலகில் ஒற்றைத் தமிழன் இருக்கும் வரை நினைவு கூருவான் என அவர் மேலும் தெரிவித்தார்.

# கனடா உதயன் பத்திரிகைக்கு போட்டியாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் யாழ்ப்பாண உதயன் பத்திரிகை ஆசிரியரிடம் பயங்கரவாத தடுப்பு பிரிவு கடுமையான விசாரணை!

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பான செய்தியை வெளியிட்டமைக்காக "உதயன்" பத்திரிகை ஆசிரியர் த. பிரபாகரன் மாவீரர் தினமான 27-11-2023 அன்று பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் 4 மணி நேரம் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி வெளியான "உதயன்" பத்திரிகையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பாக வெளியான செய்தி தொடர்பாகவே பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் பத்திரிகை ஆசிரியரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



தமிழ் மக்களால் மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில், "உதயன்" பத்திரிகை ஆசிரியர் கொழும்புக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

கொழும்பில் உள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு இன்று காலை 9 மணிக்கு அழைக்கப்பட்ட "உதயன்" பத்திரிகை ஆசிரியரிடம் பிற்பகல் ஒரு மணிவரையில் பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் துருவித் துருவி விசாரணைகளை மேற்கொண்டதுடன், வாக்குமூலமும் பதிவு செய்தனர்.

இது தொடர்பாக ஏற்கனவே யாழ்ப்பாணம் பொலிஸாரால் யாழ்ப்பாணம் நீதிமன்றில் வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஊடகங்களின் கருத்துச் சுதந்திரத்தை நசுக்கும் ஒரு செயற்பாடாகவே இது நோக்கப்படுகின்றது.

## வீணாவின் கவிக்கணை

ஒருவர் உணர்வுகளோடு
விளையாடும் தகுதி
எவருக்குமில்லை,
வேஷம் போட்டு மோசம்
செய்ய பலர் இருக்கலாம்,
ஆனால் பாசம் வைத்து,
உன்னை உண்மையாக
நேசிக்க சிலர்மட்டுமே
உள்ளனர் இங்கு,
எவர் எப்படி இருந்தாலும்,
எது சரி, எது தவறு
என்று முடிவெடுக்கும்
பக்குவத்தை நீ
உணர்ந்தால் மட்டுமே
உன்னை காத்துக்
கொள்ளலாம் இப்பூவுலகில்!



# இவ்வார ராசிபலன்

**01-12-2023 வெள்ளி தொடக்கம் 07-12-2023 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'


Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**மேஷம்:** எதிர்பார்த்த காரியம் நடக்கும். இனிய தகவல் வந்து சேரும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். வசந்தம் தேடி வரும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். திடீர் செலவு ஏற்படும். நட்பால் பிரிவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். காரியத்தடை ஏற்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பலன் தரும். பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மாறும். விருப்பமான தொழில் அமையும். பிரச்சனைகள் அகலும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். உள்ளம் மகிழும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தெய்வீகப் பற்று கூடும். புத்திரர்களால் மேன்மை உண்டு. குடும்ப வளம் கூடும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். மங்களச் செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K





**ரிஷபம்:** வம்புதும்புகள் ஒழியும். தாய், தந்தை உதவி உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. மன அமைதி கூடும். பணவரவு உண்டு. பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் மந்த நிலை காணப்படும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். தீர்த்த யாத்திரை உண்டு. திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புத வாய்ப்புக் கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வேலை வாய்ப்புக் கூடும். கோதுமை தானம் குலவிருத்தி சேரும். கணவன் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீர்வு தரும். வியாபாரம் சிறக்கும். பங்குச்சந்தையில் லாபம் வரும். பயணம் அனுகூலம் தரும். முயற்சிகள் பலன் தரும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஸ்திர சொத்துக்கள் சேரும். நல்லோர்களின் நட்பு கிட்டும். போட்டிகள் மறையும். விடாமுயற்சி அவசியம். உடல் உபாதைகள் நீங்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். வீண் வம்பு அகலும். காதல் கைகூடும். நிர்வாகத்தில் நிதானம் தேவை. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உதவிகள் கிடைக்கும். வேலை பளு குறையும். மனோ பயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. தனவரவு பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 2,9,5,7
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,M




**மிதுனம்:** நினைத்த காரியம் நிறைவேறும் வாரம். தன்னம்பிக்கை கூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். தொல்லைகள் ஒழியும். உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். தோஷங்கள் ஒதுங்கும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். விரயங்கள் அதிகமாகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வீண் வம்பு உருவாகும். பழைய பாக்கி வசூலாகும். திறமைகள் வெளிப்படும். புதிய முதலீடு லாபம் தரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. சிறப்புக்கள் சேரும். வாகனத்தால் செலவு உண்டு. பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மனச்சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன்கள் சேரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. உற்சாகம் அலைமோதும். காரிய தாமதம் ஏற்படும். வரவு திருப்தி தரும். புதிய நண்பர்களால் தகுதிகள் உயரும். பெற்றோரின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 7,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K




**கடகம்:** அதிகாரமான பேச்சுக்கள் அரங்கேறும் வாரம். வெற்றியை எட்டும் காலம். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பட்டம் பதவி வந்து சேரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். வினோதமான எண்ணங்கள் விலகும். ஆதாயம் பெருகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. முத்தான வாய்ப்பு பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். கடன்தொல்லை தீரும். கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். புதிய முதலீடு உருவாகும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. பருப்பு தானம் பாவம் போக்கும். தொல்லைகள் விலகும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீகள். ஆண்கள் அதிகாரம் உயரும். நட்பு வட்டம் விரிவடையும். பெரியோர்கள் ஆலோசனை பலன் தரும். பேச்சில் நிதானம் தேவை. கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. செயல்களில் கவனம் தேவை. பாராட்டுக்கள் அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமான், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,O




**சிம்மம்:** எதார்த்தமாக செயல்படும் வாரம். உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். உறவினரால் உதவி கிட்டும். வழக்குகள் சாதகமாகும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். கலைத்துறையில் கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். விருந்தினர் வருகை உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். உடல்நலம் சீராகும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உறவுகளால் நன்மை உண்டு. எடுத்த முயற்சி வெற்றி பெறும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். சுபிட்ஷங்கள் பெருகும். கல்வியில் கவனம் தேவை. நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். பணவரவு பாகப்பிரிவினை ஏற்படுத்தும். வாகன மாற்றம் உண்டு. புதிய நட்பு ஏற்படும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேச பயணம் உண்டு. வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். திருமண தீபம் சுடர்விடும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். அணிமணிகள் சேரும். விரும்பியது நிறைவேறும். கட்டிடத் தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். கடன் பாக்கிகள் வசூலாகும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 8,4,2,8
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,Q




**கன்னி:** மங்களச் செய்தி வரும் வாரம். நெருக்கடிகள் குறையும். பழைய பகை தீரும். உழைப்பில் கவனம் தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். கல்வியில் மேன்மை உண்டு. கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். இல்லத்தில் அமைதி பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பதற்றம் குறையும். சுறுசுறுப்பு பெருகும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். சேமிப்பு பெருகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். புதிய நட்பில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். விவசாயம் பலன் தரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். கோரிக்கைகள் நிறைவேறும். பெற்றோர் அன்பு அதிகரிக்கும். வாழ்க்கை பிடிப்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். நன்மதிப்பு கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். கடன் சுமை குறையும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். தாய்வழி உறவில் கவனம் தேவை. வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். குடும்ப வி'யத்தில் கவனம் தேவை. தாராளமான தனவரவு உண்டு. கனவுகள் பலிதமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். மருத்துவச் செலவு குறையும். நினைவாற்றல் பெருகும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பணமும், பாராட்டும் சேரும். வரன் வாயில் தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 7,4,6,2
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,M




**துலாம்:** வரவும், உறவும் வலிமையாகும். பகை மறையும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பயணங்கள் பலன் தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். விளையாட்டில் கவனம் தேவை. புதிய முயற்சிகளை தள்ளிப் போடவும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இரும்புத்தொழில் ஏற்றம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். மனச்சுமை குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மருத்துவச் செலவுகள் குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கடன் வாங்க நேரிடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. அன்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிட்டும். நல்லோர்கள் நட்பு கிட்டும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். வேண்டாத உறவுகளைத் தவிர்க்கவும். இலக்கிய ஆர்வம் கூடும். நிர்வாகப் பொறுப்பு கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அரசியல் ஆதாயம் தரும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். இனம் புரியாத சந்தோஷம் ஏற்படும். வெளியூர் பிரயாணம் வெற்றியைத் தரும். மாலை நேரத்தில் கவனம் தேவை. வெகுமானம் கிடைக்கும் காலம். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். பெண்களால் பெருமை சேரும். தனவரவு உண்டு. செயல்திறமை வெளிப்படும். ஞாபக மறதி ஏற்படும். ஆன்மீக ஈடுபாடுகள் அதிகரிக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். சுபச்செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். கருத்து வேறுபாடுகள் விலகும். புத்தி சாதுர்யம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,W




**விருச்சிகம்:** ஆசைப்பட்ட பொருள் சேரும் வாரம். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். இடையூறு அகலும். நல்ல செய்திகள் நாடி வரும். பதவி உயர்வு ஏற்படும். பண தேவைகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். அலைச்சல் ஆதாயம் தரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். மனஅமைதி அதிகரிக்கும். கடன்தொல்லை தீரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகரிக்கும். வரவுகள் மிகுதியாகும். உடல் நலம் சீராகும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். தொழிலில் கவனம் தேவை. விவாதம் வாக்குவாதங்களாக மாறும். வேண்டாத நபர்கள் விலகுவர். ஆழமான மேன்மைகள் அமையும். பயணம் அனுகூலம் தரும். பொருளாதாரம் உயரும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அமைதியை கெடுக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. அயல்நாட்டுப் பயணம் உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். எதிர்ப்புக்கள் அதிகமாகும். வீடு, மனை யோகம் உண்டு. பெண்களால் பெருமை உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். திடீர் பயணம் லாபம் தரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். பதவி உயர்வு, தாமதமாகும். பயணத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் வந்து போகும.

**(தொடர்ச்சி 22 பக்கம்)**

## இவ்வார ராசிபலன்

(21 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களின் ஆலோசனை பெருமை சேர்க்கும். பொருள் வரவு ஏற்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: வரதராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,A




**தனுசு:** பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும் வாரம். சந்தோஷம் அலைமோதும். உற்சாகம் களை கட்டும். மாற்றங்களை சந்திப்பீர்கள். உயர் பதவி யோகமுண்டு. சகோதர ஒற்றுமை பலப்படும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தெய்வ பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து கிட்டும். பொருள் வரவு ஏற்படும். நண்பகலில் நல்ல தகவல் வரும். பணியில் பாராட்டு கிடைக்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். புதிய சிந்தனை உதயமாகும். பொறுப்புக்கள் கூடும். உள்ளம் மகிழும். உதவிகள் குவியும். இரகசியம் காப்பது நல்லது. முயற்சிகளில் வளர்ச்சி அடைவீர்கள். தொட்ட காரியம் ஜெயமாகும். இல்லத்தில் அமைதி கூடும். தேகப் பலன் கூடும். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். வழக்குகள் சாதகமாகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. ஆபத்துக்கள் விலகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். விரக்திகள் மறையும். வங்கி சேமிப்பு உயரும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். நலம் விளையும் வாரம். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். தேக பலம் கூடும். திருமண முயற்சி வெற்றி பெறும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். உல்லாசப் பயணம் இனிக்கும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். முகப்பொலிவு கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். பெயர், புகழ், செல்வாக்கு கௌரவம் உயரும். இல்வாழ்வில் இனிமை கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். தந்திரமாக செயல்படுவீர்கள். விபரீத எண்ணம் விலகும். புதிய நட்பு உருவாகும். தொழில் வளம் கூடும். முற்போக்கு சிந்தனை வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாருதி (அனுமன்), அதிர்ஷ்ட எண்: 4,9,6,2
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,F




**மகரம்:** புதிய எண்ணங்கள் உருவாகும் வாரம். குளிர்பான தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். நன்மையான காலம். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். கர்ம வினைகள் அகலும். பணக்கட்டுப்பாடு அவசியம். மனைவியின் கோபம் அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. தனவரவு பெருகும். பிரபலங்களை சந்திக்க நேரிடும். விவேகம் கைகொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். காரியம் கைகூடும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரார்த்தனைகள் நிறைவேறும். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். குடும்ப உறவு பலப்படும். வீண் விரயம் தவிர்க்கவும். உறவுகளால் மதிப்பு உயரும். பாக்கிகள் வசூலாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சங்கிலி கருப்புசுவாமி, அதிர்ஷ்ட எண்: 3,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,P




**கும்பம்:** வெளியூர் பயணம் வெகுமதி தரும் வாரம். எதிரிகள் உதிரியாவார்கள். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கண் நோய் வந்து போகும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். தனவரவு பெருகும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பாதகமாக சூழ்நிலைகள் விலகும். வியாபாரம் திருப்தி தரும். எண்ணங்கள் பூர்த்தியாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. பூர்வீகச் சொத்து கிடைக்கும். குடும்பத்தில் மேன்மைகள் உண்டு. டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். உடல்நலம் திருப்தி தரும். பெருமிதம் நிறைந்த காலம். கனிவான பேச்சு அவசியம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். உத்தியோக உயர்வு உண்டு. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். சாதனை படைக்கும் காலம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். எதிர்கால சிந்தனை ஏற்றம் பெரும். உத்தியோக மாற்றம் உறுதியாகும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். பூமியால் நன்மை உண்டு. நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். வெற்றியும் வெகுமதியும் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ படைவீட்டம்மன், அதிர்ஷ்ட எண்: 3,7,9,5
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,L




**மீனம்:** தலைசிறந்த பதவி கிடைக்கும் வாரம். எண்ணம் கைகூடும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். அற்புதமான காலம். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. பொறாமைகள் கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்கள் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் லாபம் தரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் உண்டு. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை மாறும். வார்த்தைகளில் நிதானம் தேவை. செயல்களில் பொறுமை தேவை. சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். தொழில் அபிவிருத்தி அடையும். உடல்நலம் மேம்படும். அரசியல் ஆர்வம் ஏற்படும். தெய்வத்திருப்பணியில் ஆர்வம் கூடும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆழமான மேன்மைகள் அமையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K

# "தமிழ் இனப்படுகொலை தொடர்பான கல்வி வாரச் சட்டம்" எனப்படும் ஒன்றாரியோ பாராளுமன்றத்தின் சட்டமூலம் 104 இற்கு எதிரான மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை




தமிழ் இனப்படுகொலைக் கல்வி வாரச் சட்டம் 104ஐ உறுதி செய்த ஒன்ராறியோ உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து கனடாவில் உள்ள தமிழ் இனப்படுகொலை மறுப்பாளர்கள் ஒன்று சேர்ந்து மேல்முறையீடு செய்துள்ளனர். இந்த மேல்முறையீட்டுக்கான விசாரணை ஒன்ராறியோ மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் எதிர்வரும் 4 டிசம்பர் 2023 திங்கட்கிழமையன்று காலை 10:00 தொடக்கம் மாலை 4:00 மணிக்குள் நடைபெறும்.

மேற்படி விசாரணையை இணையவழி மூலம் நேரடியாகப் பார்க்கலாம். என்பதையும் கனடிய தமிழர் தேசிய அவை தமிழ் மக்களுக்கு அறியத்தருகின்றது மேலதிக விபரங்களை கீழே பார்க்கவும்:
இணையவழியில் விசாரணைகளை பார்க்கும் அடையாள இலக்கம்: 652 3321 0747
கடவுக்குறியீடு: 021210

டிசம்பர் 4 அன்று விசாரணையை நேரலையில் பார்க்கும் எவரும், ஒன்றாறியோவின் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் நடைமுறை வழிகாட்டுதலின்படி பதிவு செய்யப்படவோ/புகைப்படம் எடுக்கப்படவோ/ஸ்கிரீன்ஷாட் செய்யவோ கூடாது என்பதையும் அறியத்தருகின்றனர்.

அவ்வாறு நீதிமன்றம் அனுமதி வழங்காத பட்சத்தில், அது குற்றமாகும். நீதிமன்றங்கள் சட்டத்தின் 136, ஆர்.எஸ்.ஓ. 1990, சி. C.43, C$25,000க்கு மிகாமல் அபராதம் அல்லது ஆறு மாதங்கள் வரை சிறைத்தண்டனை அல்லது இரண்டும் தண்டனையாக, விசாரணையின் எந்தப் பகுதியையும் பதிவு செய்ய, ஸ்கிரீன்ஷாட்/பிடிப்பு மற்றும் புகைப்படம், அத்துடன் வெளியிடுதல், ஒளிபரப்புதல், அத்தகைய பதிவை மீண்டும் உருவாக்குதல் அல்லது பரப்புதல் ஆகியன குற்றங்களாகும்.

இதேவேளை தமிழ் மக்களுக்கான சட்டப்பூர்வ மசோதா 104 ஐப் பாதுகாக்க, கனடியத் தமிழர்களின் தேசிய அவைNCCT), கனடியத் தமிழ் இளைஞர் கூட்டமைப்பு (CTYA) மற்றும் கனடியத் தமிழ்க் கல்வி நிலையம் (CTA) ஆகியவை இந்த வழக்கில் பங்கேற்க தமிழ் மக்கள் சார்பாக கோல்ட்ப்ளாட் பார்ட்னர்ஸ் என்னும் பெயருடைய சட்ட நிறுவனத்தை அமர்த்தியுள்ளனர்.

104 சட்டமூலத்தை இலக்கு வைப்பதற்கான திட்டமிட்ட மற்றும் தொடர்ச்சியான முயற்சிகள், தமிழ் இனப்படுகொலை மறுப்பாளர்கள் தமிழ் இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களை மௌனமாக்குவதற்கு தீவிரமாகச் செயற்படுகின்றனர் என்பதைத் தெளிவாகக் எமக்கு காட்டி நிற்கின்றன என்பதையும் எமது தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

எனவே, தமிழ் மக்களாகிய நாம், தமிழ் இனப்படுகொலை மறுப்பு மற்றும் அதை திரிவுபடுத்துகின்ற சக்திகளை எதிர்த்துப் போராடுவதற்கான தொடர்ச்சியான ஆதரவை வழங்குவதுடன், தொடர்ந்து ஈடுபடுவதற்கும் கூட்டாக நமது முயற்சிகளை அதிகப்படுத்துவதற்கும் இந்த முயற்சியானது மிகவும் இன்றியமையாதது என்பதையும் கனடிய தமிழர் தேசிய அவை எடுத்துக் கூறவிரும்புகின்றது.

தமிழ் இனப்படுகொலை மறுப்பு மற்றும் திரிபுவாதிகளுக்கு எதிராக நாம் ஒன்றிணைந்து போராடுவோம்!

இங்ஙனம்
National Council of Canadian Tamils
Canadian Tamil Youth Alliance
Canadian Tamil Academ

---

## Hearing of the Appeal of Bill 104:
## Tamil Genocide Education Week Act

The Tamil Genocide deniers have appealed the decision of the Ontario Superior Court of Justice that upheld Bill 104, Tamil Genocide Education Week Act. The hearing for this appeal will be taking place at the Court of Appeal for Ontario on Monday, December 4th, 2023 between 10:00 am – 4:00 pm.

The hearing can be watched live virtually via Zoom. Please see Zoom details below:
Meeting ID: 652 3321 0747
Passcode: 021210

For anyone watching the hearing live on December 4th, please ensure that it should not be recorded/photographed/screenshotted in accordance with the Court of Appeal of Ontario's practice direction.

Unless permission is given by the court, it is an offence under s.136 of the Courts of Justice Act, R.S.O. 1990, c. C.43, punishable by a fine of not more than $25,000 or imprisonment of up to six months, or both, to record any part of the hearing, including by way of screenshot/capture and photograph, as well as to publish, broadcast, reproduce or disseminate any such recording.

To legally defend Bill 104, the National Council of Canadian Tamils (NCCT), Canadian Tamil Youth Alliance (CTYA) and Canadian Tamil Academy (CTA) have once again retained Goldblatt Partners law firm on behalf of the Tamil people to participate in this case as interveners.

The deliberate and continuous attempts to target Bill 104 clearly suggests, that the Tamil Genocide deniers are actively working to silence the victims of the Tamil Genocide.

Hence, as Tamil people, it is extremely integral that we maximize our efforts collectively to continue to stay engaged and provide ongoing support efforts to combat Tamil Genocide denial and distortion.

Let's stand together and collectively combat Tamil Genocide denial and distortion!

Thank you for your support.

National Council of Canadian Tamils
Canadian Tamil Youth Alliance
Canadian Tamil Academy

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL COMMERCIAL INDUSTRIAL VACANT LAND CONSTRUCTION




## Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity line of Credit • Pre-approvals •Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

Powered By
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank TD Canada Trust RFA FIRST NATIONAL FINANCIAL LP

MCAP HOME TRUST EQUITABLE BANK radius financial RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

NEED MONEY?
பணப்பிரச்சனையா!
கவலை வேண்டாம்
-$ Loans
-$ Cash
-$ Debt Consolidation
-$ 1st and 2nd Mortgage
-$ Home Renovation Loan
-$ Equity Loans
கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை!
~ No Credit Check
~ Next Day Approval.
~ Quick & Easy
உடனடியான தீர்வுக்காக அழையுங்கள்..
Call now: 647-812-6350

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்..
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1443 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 1, 2023

# STATEMENT BY THE GENERAL ASSEMBLY OF THE NATIONAL ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA REGARDING THE WORLD'S CONFLICTS

Canada's Other Voices
National Ethnic Press and Media Council of Canada
NATIONAL ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA
Conseil national de la presse et des medias ethniques du Canada

**The National Ethnic Press and Media Council of Canada (NEPMCC) is an organization whose members are journalists and publishers of newspapers in over 75 languages and also producers of TV and radio programs informing and serving non-Anglo or Francophone communities across Canada, with their roots all over the globe. We are working together, sharing ideas and respect each other's opinion and culture, finding our diversity to be our best asset.**

**We, the members of the NEMPCC, are deeply concerned about today's wars and conflicts in the world, most recently in Israel and Gaza, as well as in Ukraine and every other part of the world. It concerns and pains us to see the loss of life and the human tragedies they cause. We are also devastated to hear about dozens of our fellow journalists who have lost their lives while performing their professional mission of reporting and informing the international pubic on these tragic events.** **(continued on page 8 )**

# தமிழ் இனப்படுகொலை தொடர்பான கல்வி வாரச் சட்டம்" எனப்படும் ஒன்றாரியோ பாராளுமன்றத்தின் சட்டமூலம் 104 இற்கு எதிரான மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை




தமிழ் இனப்படுகொலைக் கல்வி வாரச் சட்டம் 104ஐ உறுதி செய்த ஒன்றாரியோ உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து கனடாவில் உள்ள தமிழ் இனப்படுகொலை மறுப்பாளர்கள் ஒன்று சேர்ந்து மேல்முறையீடு செய்துள்ளனர். இந்த மேல்முறையீட்டுக்கான விசாரணை ஒன்றாறியோ மாகாண மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் எதிர்வரும் 4 டிசம்பர் 2023 திங்கட்கிழமையன்று காலை 10:00 தொடக்கம் மாலை 4:00 மணிக்குள் நடைபெறும். மேற்படி விசாரணையை இணையவழி மூலம் நேரடியாகப் பார்க்கலாம். என்பதையும் கனடிய தமிழர் தேசிய அவை தமிழ் மக்களுக்கு அறியத்தருகின்றது மேலதிக விபரங்களை கீழே பார்க்கவும்:
இணையவழியில் விசாரணைகளை பார்க்கும் அடையாள இலக்கம் : 652 3321 0747
கடவுக்குறியீடு: 021210
(உள்ளே செய்தி 22ம் பக்கத்தில்)

# கனடாவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பாராளுமன்றமானது இன்று டிசம்பர் 01 முதல் 03 வரை கூடுகிறது

TRANSNATIONAL GOVERNMENT OF TAMIL EELAM

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பாராளுமன்றமானது கனடாவில் இன்று டிசம்பர் 01ஆம் திகதி முதல் 03ஆம்திகதி வரை கூடுகிறது!!!
நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மூன்றாவது பாராளுமன்றத்தின் பத்தாவது நேரடியமர்வானது டிசம்பர் மாதம் 1ஆம் திகதி முதல் 03ஆம் திகதி வரை கனடாவில் மார்க்கம் நகரத்தில் நடைபெறவுள்ளது.
முதல் நாள் அமர்வு டிசம்பர் 01 ஆம் திகதி "அமைதிக்கும் பாதுகாப்புக்குமான புதிய பொறிமுறை என்ற கருப்பொருளில்" 9350 **Markham Rd** இல் அமைந்துள்ள **Markham Museum** என்ற இடத்தில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

# Ratnam Foundation ஆதரவுடன் லண்டன் விம்பம் நடத்திய, மலையகம் 200ஐ முன்னிலைப்படுத்திய ஓவியக் கண்காட்சி



முதலாவது கண்காட்சி ஒக்டோபர் 20, 21 ஆம் திகதிகளில் தெல்லிப்பளை மகாஜன கல்லூரியிலும், இரண்டாவது கண்காட்சி ஒக்டோபர் 22, 23ஆம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலும், மூன்றாவது கண்காட்சி ஒக்டோபர் 27, 28ஆம் திகதிகளில் கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்திலும், நான்காவது கண்காட்சி நவம்பர் 18, 19ஆம் திகதிகளில் மட்டக்களப்பு **YMCA** மண்டபத்திலும், ஐந்தாவது கண்காட்சி ஹட்டன் நகரசபை மண்டபத்திலும்
முறையே நவம்பர் 24ஆம் 25ஆம் திகதியும் இடம்பெற்றன.
(உள்ளே செய்தி 4ம் பக்கத்தில்)

# போர் முடிவடைந்த பின்னர் மிகச்சிறந்த நிலைக்கு செல்லவேண்டிய நாடு, இன்றைக்கு தலைகுப்புற விழுந்திருக்கிறதென்பது, உயிரிழந்த தமிழர் ஆத்மாக்களின் சாபங்களேயாகும்

## பாராளுமன்ற விவாதத்தின்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய ஆணித்தரமான உரை



பொதுநிர்வாக அமைச்சுக்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் 28-11-2023 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாதத்தின்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய ஆணித்தரமான உரையில் அரசாங்கத்தை கடுமையாகவும் சிந்திக்கக் கூடிய வகையிலும் சாடினோர்.
போர் முடிவடைந்த பின்னர் மிகச்சிறந்த நிலைக்கு செல்லவேண்டிய நாடு, இன்றைக்கு தலைகுப்புற விழுந்திருக்கிறதென்பது, உயிரிழந்த ஆத்மாக்களின் சாபங்களேயாகும். புத்த பெருமான கூட வெட்கித் தலைகுனியக்கூடிய அளவுக்குத் தான் உங்கள் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.
இனவழிப்பை செய்தவர்களை காவலர்களாக சிங்கள மக்கள் கருதினார்கள். ஆனால் இன்று சிங்கள மக்களுக்கே துரோகம் அளித்தவர்கள் என்ற அடிப்படையில், அவர்கள் அந்த மக்களாலேயே துரத்தியடிக்கப்பட்டனர். இனியாவது விளங்கிக்கொண்டு, உங்களின் மிக மோசமான இனவாதப் பாதையை விட்டு திருத்திக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன். (தொடர்ச்சி 15ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H. Selvanayagam Broker